# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2041 ஆடி - மார்கழி (2010 சூலை - திசம்பர்)

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 6**

வெளியீடு: திசம்பர் 2020



# செம்மொழி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 6
திருவள்ளுவர் ஆண்டு 2041 ஆடி - மார்கழி (2010 சூலை - திசம்பர்) வெளியீடு: திசம்பர் 2020

## பொருள் நிரல்

வாழ்த்துரை.........................................1
முதன்மை ஆசிரியர் உரை.................2
கருத்தரங்குகள்.................................3
பயிலரங்குகள்...................................9
மாதங்கள்
இ.மு. சுப்பிரமணியப்பிள்ளை..........14
பணியரங்குகள்...............................22
கூட்டங்கள்......................................23

முதன்மை ஆசிரியர்
**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

ஆசிரியர் குழு
**முனைவர் அ. ஆரோக்கியதாசு**
**முனைவர் த. சரவணன்**

தொழில்நுட்பம்
**திரு. த. செந்தில்குமார்**

வடிவமைப்பு
**திரு. க. சங்கர்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் அடிப்படையாகக்கொண்டு பத்துச் செயல்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றது.

- 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
- பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்தல்
- செம்மொழித் தமிழின் மொழி, இலக்கியம், தொல்லியல், கட்டடக்கலை முதலியவை சார்ந்த காட்சிக் குறும்படங்களை உருவாக்கல்
- இணையவழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
- வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
- வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
- செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
- பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
- இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
- செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்



**அட்டைப்படம்**:

தமிழகத்தின் மிகத் தொன்மையான செங்கற்கட்டுமான முருகன் கோவில்.
சாலுவன் குப்பம், மாமல்லபுரம். (கி.பி. இரண்டாம் நூற்றாண்டு)

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
*(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)*
*40, நூறடிச்சாலை, தரமணி, சென்னை-600 113.*
*தொலைபேசி: 044-22540125 மின்னஞ்சல்: chemmozhi@cict.in இணையம்: www.cict.in*

அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்  (குறள்–611)

# வாழ்த்துரை



தமிழுக்குச் செம்மொழித் தகுதியை வழங்க வேண்டுமெனத் தொடர் கோரிக்கைகளுக்குப்பின் செம்மொழித் தகுதியைப் பெற்றோம். அதன்பின்பு ஆய்வுப் பணிகளுக்காக, செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் எனும் பெயரில், ஓர் ஆய்வு மையம் உருவாக்கப்பட்டது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஓர் அங்கமாக இவ்வாய்வு மையம் செயல்பட்டு வந்தது. அவ்வாய்வு மையம் வளர்ச்சிபெற்றுத் தன்னாட்சித் தகுதியுடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் எனும் பெயரில் தனி நிறுவனமாகத் தற்போது சென்னையில் இயங்கி வருகிறது.

இந்நிலையில் இந்நிறுவனம், முழுநேர இயக்குநர் இன்றி இயங்கிவந்த கவலை தற்போது நீங்கியுள்ளது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு முழுநேர இயக்குநர் நியமிக்கப்பட்டுச் செம்மொழித் தமிழாய்வுப் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான கட்டடப்பணிகள் நிறைவடைந்து செயல்பட ஆயத்தமாகி வருகின்றது. இவையெல்லாம் காலந்தோறும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் படிப்படியாக வளர்ச்சி பெற்று வருவதைக் காட்டுகிறது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செயல்பாடுகளைத் தாங்கிய இதழாகச் செம்மொழிச் செய்திமடல் மீண்டும் வெளிவருவது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது.

செம்மொழிச் செய்திமடல் மீண்டும் வெளிவருவதற்கு உழைத்த நிறுவன இயக்குநருக்கும் பதிப்புத்துறைக்கும் நிறுவனப் பணியாளர்களுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இனிவரும் காலங்களில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேன்மேலும் வளர்ச்சி பெற்றுத் தமிழ்கூறும் நல்லுலகம் முழுமைக்கும் நற்பயன் ஆற்ற வாழ்த்துகிறேன்.

(தெ. ஞானசுந்தரம்)
துணைத்தலைவர்

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு (குறள்-424)

# முதன்மை ஆசிரியர் உரை



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், ஏனைய தமிழாய்வு நிறுவனங்களிலிருந்து மாறுபட்ட தனித்தன்மையான நிறுவனமாகும். கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலக் கட்டங்களையும் அக்காலத் தமிழாய்வுத் தளங்களையும் தன் ஆய்வுக்களமாகக் கொண்டு செயல்பட்டுவரும் நிறுவனமாகும். மேலும், தொல்காப்பியம் தொடங்கி முத்தொள்ளாயிரம் வரையிலான 41 பழந்தமிழ் நூல்களை அடிப்படையாகக் கொண்டு பல்துறைசார் தமிழாய்வுப் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனத்தின் நிகழ்வுகளை வெளி உலகிற்குக் கொண்டு செல்லும் ஊடகமாக, இச் செம்மொழிச் செய்திமடல் விளங்குகிறது.

2012க்குப் பிறகு தொடர்ந்து வெளிவராமல் இடைநின்ற இச்செய்தி மடல் மீண்டும் புத்தெழுச்சியுடன் வெளிவருகிறது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையில் நடைபெற்ற கருத்தரங்குகள், பயிலரங்குகள், பணியரங்குகள், நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் ஆகியவற்றைப் பதிவுசெய்யும் கருவூலமாகச் செம்மொழிச் செய்திமடல் இனித் தொடர்ந்து வெளிவரும்.

நிறுவனத்தின் முதல் முழுநேர இயக்குநர் என்ற வகையில், அடிப்படைக் கட்டமைப்புகள் மற்றும் நிர்வாகம் சார்ந்த பணிகளில் பல்வேறு சவால்கள் இருப்பினும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சீர்செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகளைக் கவனத்தில் கொண்டு பலவகைகளில் முடுக்கி விடப்பட்டுள்ளன. செம்மொழிச் செய்திமடலைத் தொடர்ந்து வெளியிடுதல், மாதந்தோறும் குறைந்தது ஐந்து நூல்களை வெளியிடுதல், நிறுவன இணையத்தளத்தைப் புத்தாக்கம் செய்தல், நிறுவனத்தின் அனைத்து வெளியீடுகளையும் செறிவாக வெளியிடப் பதிப்புத்துறையைக் கட்டமைத்தல் போன்ற பல்வேறு செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டுப் பணிகள் நடந்துவருகின்றன. அதேபோல் விரைவில் செம்மொழி ஆய்விதழ் ஒன்றைத் தொடங்கித் தொடர்ந்து வெளியிடவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிகவிரைவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(இரா. சந்திரசேகரன்)
இயக்குநர்

**ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்.**

# கருத்தரங்குகள்

கருத்தரங்கம் 1

## சங்க இலக்கியம் காட்டும் சமுதாயம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாகர்கோவில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கியம் காட்டும் சமுதாயம்' என்னும் தலைப்பில் 21.10.2010 முதல் 23.10.2010 முடிய மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தின. இதன் தொடக்க விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் 'பத்துப்பாட்டு எனும் பண்பாட்டு ஆவணம்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். தென்னிந்தியத் திருச்சபைக் குமரிப் பேராயச் செயலர் பேராசிரியர் த. கிறிஸ்டின் பாபு, நாகர்கோவில் மகளிர் கிறித்தவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜா. சிந்திகெயாள், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் முனைவர் எம். எட்வின் ஞானதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முனைவர் கு. அழகேசன்
முனைவர் கு. இராஜலிங்கம்
முனைவர் தா.எ. ஐசக் சாமுவேல் நாயகம்
முனைவர் க. கமலா
முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் வே. கிறிஸ்டல்
முனைவர் ஜா. சிந்திகெயாள்
முனைவர் இரா. ச. சுகிர்தா பஸ்மத்
முனைவர் மு. செல்வம்
முனைவர் யோ. தர்மராஜ்
முனைவர் எம். நித்யகல்யாணி
முனைவர் தா. நீலகண்டப்பிள்ளை
முனைவர் இரா. பிரபாவதி தயாளன்
முனைவர் இரா. பூங்குன்றன்
பேராசிரியர் மு. இ. மாணிக்கவாசகம்
முனைவர் முகிலை இராசபாண்டியன்
முனைவர் ஆர்.எஸ். இராஜஸ்ரீ
முனைவர் ஜே. ரோஸ்லெட் டானி பாய்
முனைவர் இ. ஸ்டான்லி பாய்
முனைவர் ஜா. ஜினிலா
முனைவர் கு. செயகுமாரி
முனைவர் ஆர். ஜோஸ்லி





ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

இக்கருத்தரங்கின் நிறைவு விழாவில் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவன இணைப்பேராசிரியர் சீ. பக்தவத்சல பாரதி சிறப்புரையாற்றினார். அகத்தீசுவரம் விவேகானந்தா கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் ஈ. பொன்னுலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

★

கருத்தரங்கம் 2

## சங்க இலக்கியத்திற்குச் சேரநாட்டுப் புலவர்களின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கியத்திற்குச் சேரநாட்டுப் புலவர்களின் பங்களிப்பு' என்னும் பொருளில் 10.11.2010 முதல் 12.11.2010 வரை மூன்று நாள்கள் தேசியக் கருத்தரங்கை நடத்தின.

இதன் தொடக்க விழாவில் கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் சு. இராசேந்திரன் அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் கா. வேழவேந்தன் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தார். எழுத்தாளர் பொன்னீலன் சிறப்புரையாற்றினார். கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் முனைவர் அப்துல் ரகீம் தலைமையுரையாற்றினார். கேரளப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் குற்றாலம் பிள்ளை, கேரளப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் சி. பாலசுப்பிரமணியப் பிள்ளை, ஏ.கே.ஜி.சி.டி பொதுச்செயலர் முனைவர் கே. ஜெயக்குமார், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத் தலைவர் கா. பாலசுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

முனைவர் வேதசகாயக்குமார்
முனைவர் மா. நயினார்
முனைவர் அ. ஆலிஸ்





முனைவர் நிஷாறாஃபி
முனைவர் பா. வீரப்பன்
பேராசிரியர் ச.பொ. சீனிவாசன்
முனைவர் மீரான் பிள்ளை
முனைவர் ப. செல்வக்குமார்
முனைவர் த. விஜயலட்சுமி
பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
முனைவர் வெ. வேதாச்சலம்
முனைவர் சண்முக. செல்வக்கணபதி
முனைவர் ஹசீனா
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்
முனைவர் எம். சமுத்திரபாண்டியன்
பேராசிரியர் இந்திரா மனுவேல்
முனைவர் சு. செல்வகுமாரன்
முனைவர் இரா. இரமாதேவி

இக்கருத்தரங்கில் இருநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். 12.11.2010 அன்று மாலை கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. பேராசிரியர் பேபி சகிலா வரவேற்புரையாற்றினார். கேரளப் பல்கலைக்கழக இணைத் துணைவேந்தர் முனைவர் ஜெ. பிரகாஷ் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் நிறைவுரையாற்றினார். அவ்வுரையில் அவர் சங்க இலக்கியப் பெருமையை உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பேசினார். பல்கலைக்கழகக் கல்லூரித் துணைமுதல்வர் முனைவர் வசந்தகுமாரி, சைவப்பிரகாச சபையின் தலைவர் இரவீந்திரன், முனைவர் மீரான் பிள்ளை, முனைவர் வேதசகாயக்குமார், முனைவர் ஸ்டீபன்சாம், சந்தோஷ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பல்கலைக்கழகக் கல்லூரிப் பேராசிரியர் ச.பொ. சீனிவாசன் நன்றி நவின்றார்.

கருத்தரங்கம் 3

## தமிழ்க் காப்பியங்களையும் நீதி இலக்கியங்களையும் மொழிபெயர்த்தல் - சிக்கல்களும் தீர்வுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையும் இணைந்து 'தமிழ்க் காப்பியங்களையும் நீதி இலக்கியங்களையும் மொழிபெயர்த்தல் - சிக்கல்களும் தீர்வுகளும்' என்னும் தலைப்பில் 24.11.2010 முதல் 26.11.2010 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.

★

கருத்தரங்கம் 4

## தமிழ்ச் செவ்வியல் இலக்கிய உரையாடல்களும் மனித உறவு மேம்பாடும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இலயோலா கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தமிழ்ச் செவ்வியல் இலக்கிய உரையாடல்களும் மனித உறவு மேம்பாடும்' என்னும் தலைப்பில் 01.12.2010 முதல் 03.12.2010 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தின.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 01.12.2010 அன்று காலை பத்து மணியளவில் இலாரன்ஸ் சுந்தரம் அரங்கில் நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் சூ.அ. செல்வநாதன் வரவேற்புரையாற்றினார். இலயோலா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சி.அ. இராசராசன் கருத்தரங்க அறிமுகவுரை நிகழ்த்தினார். இலயோலா கல்லூரி அதிபர் அருள்தந்தை கு. அமல் தலைமையுரையாற்றினார். சென்னை மண்டலச் சேசுசபையின் பணித்தளத்தலைவர் அருள்தந்தை அ. விக்டர், இலயோலா கல்லூரிச் செயலர் முனைவர் ஜோ. அருண், இலயோலா கல்லூரி முதல்வர் முனைவர் பி. ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய மேனாள் உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் முன்னிலையில் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கர்னல் முனைவர் க. திருவாசகம் 'இலக்கியத்தில் மனிதநேயம்' என்னும் நூலை வெளியிட்டு விழாப் பேருரை நிகழ்த்தினார். கருத்தரங்கத் துணை ஒருங்கிணைப்பாளர்





பேராசிரியர் எல். சூசை சகாயராஜா நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

முனைவர் அ. குழந்தைசாமி
முனைவர் மோசசு மைக்கேல் ஃபாரடே
முனைவர் சூ. அ. செல்வநாதன்
பேராசிரியர் து. மேரிசொர்ணாம்பாள்
முனைவர் அ. பிரின்ஸ்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
பேராசிரியர் சி.மா. இரவிச்சந்திரன்
முனைவர் எல்.வி.கே. ஸ்ரீதரன்
பேராசிரியர் சூ. அமல்ராஜ்
பேராசிரியர் ஜா. அமிர்தலெனின்
பேராசிரியர் இ. ஜோஸ்பின் ஜெயசாந்தி
முனைவர் அ. மரியசூசை
முனைவர் மு. முத்துவேலு
முனைவர் ம. ஜோசப் இருதய சேவியர்
முனைவர் சி.அ. இராசராசன்
முனைவர் ப. மகாலிங்கம்
முனைவர் தே. செல்லையா
முனைவர் டோ. டேவிட் ஸ்டான்லி
முனைவர் சூ. அமல்ராசு
பேராசிரியர் ஜோ. அந்தோணிராஜ்
பேராசிரியர் ம. ஜெயபிரகாஸ் ரத்தினதியாகு
பேராசிரியர் எல். சூசை சகாயராஜா
பேராசிரியர் ஜெ. சந்தியாகப்பர்
முனைவர் அ. டேனியல்

03.12.2010 அன்று முற்பகல் நடைபெற்ற கருத்தரங்க நிறைவு விழாவில் முனைவர் அ. டேனியல் அனைவரையும் வரவேற்றார். இலயோலா கல்லூரி முதல்வர் முனைவர் பி. ஜெயராஜ் தலைமையுரையாற்றினார். இலயோலா கல்லூரி இணைமுதல்வர் முனைவர் எஸ். ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி சிறப்புரையாற்றினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி விழாப்பேருரை நிகழ்த்தினார். பேராசிரியர் ஞா. ஞானயுவராசு நன்றி கூறினார்.

★

கருத்தரங்கம் 5

## பண்டைத் தமிழர் வாணிபம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக வணிகவியல் துறையும் இணைந்து ‘பண்டைத் தமிழர் வாணிபம்’ என்னும் பொருண்மையில் இரண்டு நாள் கருத்தரங்கினை 2010 டிசம்பர் 14,15 ஆகிய நாள்களில் நடத்தின.

இக்கருத்தரங்கத் தொடக்க விழாவில் பாரதியார் பல்கலைக்கழக வணிகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் கோ. கணேசன் வரவேற்புரையாற்றினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. சுவாமிநாதன் தலைமையுரையாற்றினார். மதுரை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் த. இராசாராம் தொடக்கவுரையாற்றினார். சேலம் பெரியார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மு. தங்கராசு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முனைவர் ப. செல்லச்சாமி நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

முனைவர் மு. தனபாக்கியம்
திரு கா. மயில்வேல்
முனைவர் க. இரமணன்
முனைவர் தி. இளங்கோவன்
முனைவர் மோ. சுமதி
முனைவர் த. இளங்கோவன்
முனைவர் மூ. சௌந்தரபாண்டியன்
முனைவர் சி. குலசேகரன்
முனைவர் வே. ரிச்சர்ட்பால்
முனைவர் ம. மனோன்மணி
முனைவர் கா. அரங்கசாமி
முனைவர் அர. பூங்குன்றன்
முனைவர் ப. செல்லச்சாமி
முனைவர் செ. திலகம்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் கி. கோவிந்தராஜ்

15.12.2010 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் முனைவர் மு. ஜெகதீஸ்வரன் வரவேற்புரை வழங்கினார். வணிகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் கோ. கணேசன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் சிறப்புரையாற்றினார். முனைவர் மோ. சுமதி கருத்தரங்கத் தொகுப்புரை வழங்கினார். பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் போ. திருமால்வளவன் நிறைவுரையாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் பத்மாசனி நன்றி நவிலக் கருத்தரங்கம் இனிதே நிறைவடைந்தது.

★

கருத்தரங்கம் 6

## செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் அகமரபுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் அகமரபுகள்' என்னும் பொருண்மையில் 16.12.2010 முதல் 18.12.2010 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.





முனைவர் தெ. ஞானசுந்தரம்
முனைவர் சி. சுப்பிரமணியப்பிள்ளை
முனைவர் இராம. குருநாதன்
முனைவர் ஈ. பொன்னுலிங்கம்
முனைவர் சி. ஜேசுராஜ்
முனைவர் ஜா. சிந்திகெயாள்
முனைவர் காஞ்சனா பாலசுப்பிரமணியம்
முனைவர் தா. நீலகண்டப் பிள்ளை
முனைவர் அ.கா. பெருமாள்
முனைவர் ந. சண்முகம்
முனைவர் முகிலை இராசபாண்டியன்
முனைவர் கு. செயகுமாரி
முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
செல்வி மோ. அனுசூயா
முனைவர் வ. ஜெயசீலி
முனைவர் ச. இராஜா
பேராசிரியர் மு. இ. மாணிக்கவாசகம்
முனைவர் ந. நீலமோகன்
பேராசிரியர் கு. இளங்குமார்
முனைவர் மு. செல்வம்
பேராசிரியர் கு. அழகேசன்
பேராசிரியர் கு. இராஜலிங்கம்
முனைவர் சு. சிவா
முனைவர் ந. கலைவாணி
முனைவர் இரா. கண்ணன்
முனைவர் தா.எ. ஐசக் சாமுவேல் நாயகம்
பேராசிரியர் த.வி. சிம்லாஸ்டார்

ஆகிய அறிஞர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

★

கருத்தரங்கம் 7

## சங்க இலக்கியங்கள் காட்டும் மன்னர் மாட்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருநெல்வேலி இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கியங்கள் காட்டும் மன்னர் மாட்சி' என்னும் பொருண்மையில் 20.12.2010 முதல் 22.12.2010 முடிய மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தின.

பேராசிரியர் நா. சிவசுப்பிரமணியன்
முனைவர் சி. மைக்கேல் சரோஜினி பாய்
முனைவர் ஜே.ரோஸ்லெட் டானிபாய்
முனைவர் யோ. தர்மராஜ்
முனைவர் த. இராகினி
முனைவர் கு. செயகுமாரி
முனைவர் சு. மகாலெட்சுமி
பேராசிரியர் இரா. மோகன்
முனைவர் ஞா. ஸ்டீபன்
முனைவர் தா.எ. ஐசக் சாமுவேல் நாயகம்
முனைவர் நா. வேலம்மாள்
முனைவர் சு. ருக்மணி
முனைவர் எஸ். ஸ்ரீகுமார்
முனைவர் இ. ஸ்டான்லி பாய்






முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் வி. ஹெர்மனா ஜில்ட் ஆராச்சி
பேராசிரியர் நிர்மலா மோகன்
பேராசிரியர் வாசுகி ஜெயரத்னம்
முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர்
திருமிகு மா. பிரேமா
முனைவர் வே. கட்டளை கைலாசம்

ஆகிய அறிஞர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

★

கருத்தரங்கம் 8

## மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் முறைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையுடன் கோயம்புத்தூர் கற்பகம் கல்வியியல் கல்லூரி 'மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் முறைகள்' என்னும் தலைப்பில் 20.12.2010 முதல் 22.12.2010 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கை நடத்தியது.

இக்கருத்தரங்கத் தொடக்க விழாவில் கற்பகம் கல்வியியல் கல்லூரி முதல்வர் ஜீவரத்தினா வரவேற்புரையாற்றினார். கோவை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி ஆனந்தி தொடக்கவுரையாற்றினார். பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் சி.மா. இரவிச்சந்திரன் தலைமையுரையாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச. தங்கமணி நன்றி நவின்றார்.




இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

முனைவர் நடராசன்
முனைவர் தூ. சேதுபாண்டியன்
முனைவர் மு. மதியழகன்
முனைவர் க. திலகவதி
முனைவர் செல்வி
முனைவர் ப. தமிழரசி
முனைவர் செல்வராசு
முனைவர் ப. வேல்முருகன்
முனைவர் அருணை. பாலறாவாயன்
திருமிகு உமாதேவி

இக்கருத்தரங்கில் கோவை மாவட்ட மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள் எண்பத்தைந்து பேர் கலந்துகொண்டனர். 22.10.2010 அன்று மாலை கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. கற்பகம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப. தமிழரசி வரவேற்புரை வழங்கினார். கற்பகம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இராமசாமி தலைமையுரையாற்றினார். சிற்பி பாலசுப்பிரமணியம் சிறப்புரையாற்றினார். கற்பகம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் கோ. நிர்மலாதேவி நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

கருத்தரங்கம் 9

## சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவர்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வாலாஜாப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள்' என்னும் தலைப்பில் 29.12.2010 முதல் 31.12.2010 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 29.12.2010 அன்று காலை பத்து மணியளவில் தொடங்கியது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வி. அநுராதா வரவேற்புரையும் அறிமுகவுரையும் நிகழ்த்தினார். திருவள்ளுவர் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. கிருஷ்ணமூர்த்தி தலைமையுரையும் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) முனைவர் இரா. விஜயா முன்னிலையுரையும் ஆற்றினர். முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் எண்பேராய உறுப்பினருமாகிய கவிவேந்தர் கா. வேழவேந்தன் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர், உலக நாடுகளில் தமிழ் மொழிக்கு உள்ள உயர்ந்த மதிப்பினையும் தமிழ்மொழியின் இலக்கண, இலக்கிய வளங்களையும் எடுத்துக்கூறினார். முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் திருமதி வசந்தா கலியாணசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் பா. தாயாரம்மாள் நன்றிகூறினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் ச.கௌ. கவிதா தொடக்க விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.



பேராசிரியர் அ. ஆலிஸ்
பேராசிரியர் ப. மருதநாயகம்
பேராசிரியர் அ.அ. மணவாளன்
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் ஜா. மனுவேல்
பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்
முனைவர் ய. மணிகண்டன்
முனைவர் இரா. சீனிவாசன்
பேராசிரியர் சா. வளவன்
பேராசிரியர் இரா. பிரேமா
முனைவர் அரங்க. மல்லிகா
முனைவர் க.அ. ஜோதிராணி
முனைவர் சிவ. மாதவன்
முனைவர் ஆ. மணி
முனைவர் அ. மலர்
முனைவர் தே. செல்லையா
முனைவர் கி. சிவக்குமார்
முனைவர் கோ. சாந்தி
முனைவர் முகமதுயூசுப்
முனைவர் இரா. தமிழ்ச்செல்வி
முனைவர் தி. கமலி

31.12.2010 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி.வெ. சுசிலா வரவேற்புரையும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வி. அநுராதா அறிமுகவுரையும் நிகழ்த்தினர். வேலூர்த் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் இரா. விஜயா முன்னிலையுரையாற்றினார். பொருளியல் துறைத்தலைவர் முனைவர் மேஜர் க. மாலதி, சென்னை இராணிமேரிக் கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் இரா. தமிழ்ச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமாகிய முனைவர் வி. அநுராதா நன்றி நல்கினார்.

★

## பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகத்தில் நிறுவனத் தலைவர் தமிழக முதல்வர்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.08.2010 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தைப் பார்வையிட்டார். மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு வெள்ளக்கோவில் திரு மு.பெ. சாமிநாதன், ஆய்வறிஞரும் நூலக ஒருங்கிணைப்பாளருமான முனைவர் மே.து. இராசுகுமார் மற்றும் செம்மொழித் திட்ட ஆய்வாளர்கள் உடனிருந்தனர்.

# பயிலரங்குகள்

பயிலரங்கம் 1

## தொல்காப்பியம் - ஒலியனியல், உருபனியல், தொடரியல்





செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி நிறுவனமும் இணைந்து 'தொல்காப்பியம் - ஒலியனியல், உருபனியல், தொடரியல்' என்னும் தலைப்பில் 18.10.2010 முதல் 24.10.2010 முடிய ஏழு நாள்கள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 2

## தொல்காப்பியம் சுட்டும் இலக்கியவியல், இலக்கணவியல் மரபுகளும் சங்க இலக்கியத்தில் அவற்றின் பதிவுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பியம் சுட்டும் இலக்கியவியல், இலக்கணவியல் மரபுகளும் சங்க இலக்கியத்தில் அவற்றின் பதிவுகளும்' என்னும் தலைப்பில் 22.11.2010 முதல் 01.12.2010 முடிய பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அறிவிப்புகள், வெளியீடுகள் பற்றித் தெரிந்துகொள்ள கீழ்க்காணும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்**

**www.cict.in**

பயிலரங்கம் 3

## சிலப்பதிகாரம் மொழியமைப்பும் இலக்கியக் கட்டமைப்பும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து 'சிலப்பதிகாரம் மொழியமைப்பும் இலக்கியக் கட்டமைப்பும்' என்னும் தலைப்பில் 24.11.2010 முதல் 03.12.2010 முடிய பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 4

## தமிழ் இலக்கிய வகைகள் - ஒரு வரலாற்றுப் பார்வை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரித் தமிழ்த்துறையும் உயராய்வு மையமும் இணைந்து 'தமிழ் இலக்கிய வகைகள் - ஒரு வரலாற்றுப் பார்வை' என்னும் தலைப்பில் 24.11.2010 முதல் 04.12.2010 வரை பத்து நாள்கள் பயிலரங்கினை நடத்தின.

முனைவர் அ. இராமசாமி
பேராசிரியர் இ. முத்தையா
பேராசிரியர் வீ. இரேணுகாதேவி
பேராசிரியர் மு. இராமசாமி
முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
பேராசிரியர் அ. ஆலிஸ்
பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்
முனைவர் ஞா. ஸ்டீபன்
பேராசிரியர் கரு.அழ. குணசேகரன்
பேராசிரியர் பா. மதிவாணன்
பேராசிரியர் மு. மணிவேல்
பேராசிரியர் பெ. மாதையன்
பேராசிரியர் இராம. சுந்தரம்
முனைவர் மு. அருணகிரி
பேராசிரியர் இரா. காசிராசன்
பேராசிரியர் தா. ஈசுவரப்பிள்ளை
பேராசிரியர் இரா. மோகன்
முனைவர் நிர்மலா மோகன்





முனைவர் விசயவேணுகோபால்
பேராசிரியர் தி.சு. நடராசன்
பேராசிரியர் ம. திருமலை
பேராசிரியர் கதிர் மகாதேவன்
பேராசிரியர் பா. ஆனந்தகுமார்
முனைவர் இரா. கண்ணன்
பேராசிரியர் செ. சாரதாம்பாள்
பேராசிரியர் அ. அறிவுநம்பி
முனைவர் க. பசும்பொன்

ஆகிய அறிஞர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 5

## பழந்தமிழ் இலக்கண இலக்கிய உரைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் இணைந்து 'பழந்தமிழ் இலக்கண இலக்கிய உரைகள்' என்னும் பொருண்மையில் 01.12.2010 முதல் 10.12.2010 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

முனைவர் அம்பை லோ. மணிவண்ணன்
முனைவர் சு. அழகியநம்பி
பேராசிரியர் ச. சிவகாமி
பேராசிரியர் பா. மதிவாணன்
திரு க. சிவனேசன்
திரு தா.கு. சுப்பிரமணியம்
முனைவர் ப. கனகா
பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்
பேராசிரியர் வாசுகி ஜெயரத்னம்
பேராசிரியர் அ. ஆலிஸ்
முனைவர் ஆ. தசரதன்
முனைவர் யாழ் சு. சந்திரா
முனைவர் பு. பாலாஜி
பேராசிரியர் இரா. காசிராசன்
பேராசிரியர் ஜா. எவாஞ்சலின் மனோகரன்
திரு நா. கருணாமூர்த்தி
முனைவர் இ. பேச்சிமுத்து
முனைவர் மு. பாண்டி
பேராசிரியர் அ. அறிவுநம்பி
பேராசிரியர் ப. மருதநாயகம்
முனைவர் த. இரத்னமாலா
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் அ. சோமசுந்தரம்
முனைவர் ச. பாரிஜாதம்
பேராசிரியர் மு. மணிவேல்
பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்
பேராசிரியர் பொ. நா. கமலா
பேராசிரியர் நிர்மலா மோகன்
பேராசிரியர் இரா. மோகன்
பேராசிரியர் சு. வேங்கடராமன்
பேராசிரியர் இராம. சுந்தரம்
பேராசிரியர் செ. சாரதாம்பாள்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் கு. ஞானசம்பந்தன்
முனைவர் மு. அருணகிரி

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 6

## சங்க இலக்கியம் காட்டும் தமிழகம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுக்கோட்டைத் திருக்குறள் கழகமும் இணைந்து 'சங்க இலக்கியம் காட்டும் தமிழகம்' என்னும் தலைப்பில் 05.12.2010 முதல் 14.12.2010 முடிய பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.

பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
முனைவர் க. மனோகரன்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
பேராசிரியர் தாயம்மாள் அறவாணன்
பேராசிரியர் க.ப. அறவாணன்
முனைவர் இராம. சிதம்பரம்
பேராசிரியர் து. சீனிச்சாமி
முனைவர் யாழ் சு. சந்திரா
முனைவர் க. முத்துச்சாமி

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.







★

பயிலரங்கம் 7

## தொல்லியல் காட்டும் தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகப் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறையும் இணைந்து 'தொல்லியல் காட்டும் தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும்' என்னும் பொருண்மையில் 11.12.2010 முதல் 20.12.2010 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 8

## சங்க இலக்கியத்தில் தொல்காப்பிய இலக்கியவியல் கோட்பாடுகளின் தழுவலும் விலகலும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் விருதுநகர் வே.வ. வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கியத்தில் தொல்காப்பிய இலக்கியவியல் கோட்பாடுகளின் தழுவலும் விலகலும்' என்னும் தலைப்பில் 13.12.2010 முதல் 22.12.2010 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

பேராசிரியர் இரா. காசிராசன்
முனைவர் இ. பேச்சிமுத்து
முனைவர் வே. கட்டளை கைலாசம்
முனைவர் நா. சிவசுப்பிரமணியன்
முனைவர் ப. கனகா
முனைவர் ச. பாரிஜாதம்
பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்
பேராசிரியர் சோ. குருலட்சுமி
முனைவர் க. இராமச்சந்திரன்
முனைவர் க. முத்துவேல்
முனைவர் ம. சரோஜா
பேராசிரியர் அ. இராமசாமி
முனைவர் பி. மரியசெல்வம்
முனைவர் த. இரத்னமாலா
பேராசிரியர் செ. சாரதாம்பாள்
முனைவர் ஆ. தனஞ்செயன்
முனைவர் எஸ். ஸ்ரீகுமார்
முனைவர் எஸ். ஜோசப் இருதய சேவியர்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
பேராசிரியர் அ. ஆலிஸ்




முனைவர் து. சீனிச்சாமி
முனைவர் ந. காந்திமதி லட்சுமி
முனைவர் ச. கண்மணி
பேராசிரியர் அ. அறிவுநம்பி
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் ந. பொன்மதி
பேராசிரியர் தி.சு. நடராசன்
முனைவர் க. முத்துச்சாமி
முனைவர் நா. வேலம்மாள்
முனைவர் யாழ் சு. சந்திரா
முனைவர் எம்.எம். மீரான் பிள்ளை
முனைவர் தி. கமலி
பேராசிரியர் சி. சுப்பிரமணியப்பிள்ளை
முனைவர் த. வேல்மயில்
பேராசிரியர் அ. சீனிவாசன்
பேராசிரியர் மு. மணிவேல்

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 9

## பாணினியம் - தொல்காப்பியம்: இலக்கண விளக்க உத்திகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகச் சமஸ்கிருதத் துறையும் இணைந்து 'பாணினியம்-தொல்காப்பியம்: இலக்கண விளக்க உத்திகள்' என்னும் பொருண்மையில் 13.12.2010 முதல் 22.12.2010 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 10

## தொல்காப்பியம் - எழுத்தும் சொல்லும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளித் தேசியக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பியம்-எழுத்தும் சொல்லும்' என்னும் தலைப்பில் 20.12.2010 முதல் 29.12.2010 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 11

## ஒப்பீட்டு நோக்கில் தொல்காப்பிய இலக்கியவியல் கோட்பாடுகளும் சங்க இலக்கிய மரபுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியும் இணைந்து 'ஒப்பீட்டு நோக்கில் தொல்காப்பிய இலக்கியவியல் கோட்பாடுகளும் சங்க இலக்கிய மரபுகளும்' என்னும் பொருண்மையில் 21.12.2010 முதல் 30.12.2010 முடிய பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

முனைவர் ஆ. மணி
பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்
முனைவர் ஜெ. சியாமளா





பயிலரங்கம் 12

## பன்முக நோக்கில் சிலப்பதிகாரம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மேலையூர் - பூம்புகார்ச் சிலப்பதிகார ஆய்வு மையமும் இணைந்து 'பன்முக நோக்கில் சிலப்பதிகாரம்' என்னும் தலைப்பில் 24.12.2010 முதல் 02.01.2011 வரை பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தின.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 24.12.2010 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்றது. மேலையூர் சீனிவாசா மேல்நிலைப்பள்ளி மாணவியர் கண்ணகி வாழ்த்து நடனமும் ''போதிலார் திருவினாள்'' நடனமும் ''திங்களைப் போற்றுதும்'' நடனமும் ஆடினர். சீனிவாசா மேல்நிலைப்பள்ளி ஆட்சிக்குழுத் தலைவர் திருமதி ஜீவா இராஜசேகரன் குத்துவிளக்கு ஏற்றினார். சிலப்பதிகார ஆய்வு மையச் செயலர் இரா. இராஜசேகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் தொடக்கவுரையாற்றினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. இராசேந்திரன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் சிலம்பொலி சு. செல்லப்பன் சிறப்புரையாற்றினார். சிலப்பதிகார ஆய்வு மையத் துணைச்செயலர் இரா. சிவபுண்ணியம் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.







முனைவர் வாணி அறிவாளன்
முனைவர் இந்திரா மனுவேல்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
முனைவர் இராச. திருமாவளவன்
முனைவர் கே. பழனிவேலு
முனைவர் சிவ. மாதவன்
முனைவர் சு. திருநாவுக்கரசு
பேராசிரியர் க. பூரணச்சந்திரன்
முனைவர் சிலம்பு நா. செல்வராசு
முனைவர் கோ. விசயவேணுகோபால்
பேராசிரியர் அ. ஆலிஸ்
முனைவர் சு. விஜயகாந்தி
முனைவர் இரா. சம்பத்
பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
பேராசிரியர் நிர்மலா மோகன்
பேராசிரியர் இரா. மோகன்
முனைவர் நா. இளங்கோ
பேராசிரியர் வ. குருநாதன்
முனைவர் சு. தமிழ்வேலு
பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்
முனைவர் க. விநாயகம்
பேராசிரியர் க.ப. அறவாணன்
முனைவர் இரத்தின. வேங்கடேசன்
திருமிகு இரா. தமிழரசி
திருமிகு வை. கலைவாணி
திருமிகு க. இலட்சுமிதேவி
முனைவர் ஏ. எழில்வசந்தன்
திருமிகு இரா. வள்ளி
முனைவர் து. அமரதீபா
திருமிகு ஆ. கீதாலட்சுமி

ஆகிய அறிஞர்கள் இப் பயிலரங்கில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

முனைவர் மு. சிவச்சந்திரன்
பேராசிரியர் ப. மருதநாயகம்
முனைவர் த. தியாகராஜன்
முனைவர் துரை. சீனிச்சாமி
முனைவர் க. சேகர்
முனைவர் த. அகோரம்
புலவர் நா. தியாகராஜன்
முனைவர் க. நெடுஞ்செழியன்
முனைவர் கூ.மு. புவனேசுவரி
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
பேராசிரியர் கா. செல்லப்பன்
முனைவர் நா. மம்மது
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் செ.மா. க. வசந்தகோகிலம்
பேராசிரியர் கரு.அழ. குணசேகரன்
முனைவர் துரை. குணசேகரன்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் பி. இராஜேஸ்வரி
பேராசிரியர் இரா. காசிராசன்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
முனைவர் அ.மா. இலட்சுமிபதிராஜ்
முனைவர் ம.வே. பசுபதி
பேராசிரியர் இரா. இராமலிங்கம்

இப்பயிலரங்கில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், திருப்பனந்தாள் எஸ்.கே.எஸ்.எஸ். கலைக் கல்லூரி, புதுவைக் காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், கொளஞ்சியப்பர் அரசுக் கலைக்கல்லூரி, பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னை மாநிலக் கல்லூரி, தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, மன்னம்பந்தல் அ.வ.அ. கல்லூரி ஆகியவற்றிலிருந்து ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

02.01.2011 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் சிலப்பதிகார ஆய்வு மையச் செயலர் இரா. இராஜசேகரன் வரவேற்புரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் எம். இராமநாதன் தலைமையுரையாற்றினார். காரைக்கால் பண்பலை வானொலி நிலைய இயக்குநர் காத்த. துரைசாமி, மருத்துவர் ஜெ. இராஜமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பேராசிரியர் ஔவை து. நடராசன் பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி நிறைவுப் பேருரையாற்றினார். மேலையூர் சீனிவாசா மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் அ. எழிலரசன் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

## முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வு உதவித் தொகைக்கான எழுத்துத் தேர்வு



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 2010-11ஆம் கல்வியாண்டுக்கான முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வு மேற்கொள்வோருக்கு உதவித்தொகை வழங்குவதற்கான எழுத்துத்தேர்வு 31.08.2010 அன்று பிற்பகல் மாநிலக் கல்லூரியில் உள்ள புதிய தேர்வுக் கூடத்தில் நடைபெற்றது. இத்தேர்வில் முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகைக்கு 25 மாணவர்கள் தேர்வு எழுதினர். முனைவர் பட்ட ஆய்வு உதவித் தொகைக்கு 134 மாணவர்கள் தேர்வு எழுதினர்.

# மாதங்கள்

## இ.மு. சுப்பிரமணியப்பிள்ளை

''தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணும்''

''வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்.''

- நாலடியார்



மிகவும் விளக்கமாகத் தோன்றுகின்ற ஞாயிறு அளவுகருவியாக, கூற்றுவன் நமது வாழ்நாளை ஒவ்வொரு நாளும் அளந்து உண்ணுகின்றான். விளங்குகின்ற ஒளிமண்டிலமான அஞ்ஞாயிறும் நமது வாழ்நாளுக்கு அளவாக ஒவ்வொரு நாளும் தவறாமல் தோன்றுகின்றான். அவன் பகலையும் செய்கிறான், இரவையும் செய்கிறான். அவன் நமக்குத் தோன்றுகின்ற காலமே பகலெனப்படும்; அவன் நமக்குத் தோன்றாதிருக்கின்ற காலமே இரவெனப்படும். பகலில் ஒளி திகழ்கிறது; இரவில் இருள் மிகுகிறது. அவன் பகலைச் செய்வதால் பகலவனெனவும் இரவைச் செய்வதால் இரவி யெனவும் சொல்லப்படுகிறான். பகலும் இரவும் சேர்ந்தது ஓர் நாள். இந்நாள் அறுபது நாழிகைகளாகப் பகுக்கப் பெற்றிருக்கிறது. சில காலங்களில் பகற்பொழுது அதிகமாக இருக்கும்; சில காலங்களில் இராப்பொழுது அதிகமாக இருக்கும். பகல் அதிகமாக இருந்தாலும் அன்றி இரவு அதிகமாக இருந்தாலும் எக்காலத்திலும் பகலும் இரவும் சேர்ந்து அறுபது நாழிகைகளே. எவ்வாறெனில், பகல் அதிகமாக இருக்கிற காலத்திலே இரவு குறைந்திருக்கிறது; இரவு அதிகமாக இருக்கிற காலத்திலே பகல் குறைந்திருக்கிறது. பகலில் எவ்வளவு நாழிகை அதிகமாக இருக்கிறதோ அல்லது குறைவாக இருக்கிறதோ அவ்வளவு நாழிகை இரவில் குறைந்தோ அல்லது அதிகமாகவோ இருக்கிறது.

இரவி தோன்றுகிற நேரம் முதல், இரவி மறைகிற நேரம் வரையுள்ள காலம் பகலெனவும் அவன் மறைந்து மீண்டும் தோன்றுகிறவரையுள்ள காலம் இரவெனவும் இவ்வுலகத்திலுள்ள மக்கள் அனைவராலும் கொள்ளப்படுகின்றன. இருந்தாலும் தமிழ் மக்கள் மட்டுமே அவன் தோன்றுகிற காலம் முதல் மறைந்து மறுபடி தோன்றுகிற காலம் வரையுள்ள பொழுதை ஓர் நாள் அல்லது ஓர் கிழமையாகக் கொண்டு வருகின்றனர். முகம்மதியரோ இரவி மறைகிற வேளையாகிய இரவு தொடங்கி, தோன்றி மறுபடி அவன் மறைகிற வரையுள்ள காலத்தையே ஓர் கிழமையாகக் கொண்டு வருகின்றனர். கிறித்தவர்களாகிய மேல் நாட்டினரோ இரவில் நடுக்காலம் தொடங்கி அதாவது நள்ளிரவு முதல் இரவி தோன்றி மறைந்து பின்வரும் மறு நள்ளிரவு வரையுள்ள காலத்தையே ஓர் கிழமையாகக் கொண்டு வருகின்றனர். அதாவது தமிழ்மக்கள் கிழமை காலை முதலும் முகம்மதியர் கிழமை மாலை முதலும் கிறித்தவர் கிழமை நள்ளிரவு முதலும் தொடங்குகின்றன.

கிறித்தவர்கள் ஓர் நாளை இருபத்து நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு மணியென்று வழங்கப் பெறுகின்றது. ஒரு மணியென்பது தமிழ்மக்கள் பகுப்பின்படி இரண்டரை நாழிகைகளாம். தமிழ்மக்கள் காலத்தை ஓர்ந்தறிவதற்கு ஓரையெனப் பெயரிய ஓர் கால அளவையும் வைத்திருக்கிறார்கள். இவ்வோரை ஒரு மணியாகிய இரண்டரை நாழிகை அளவினதாம். இவ்வோரையே கிழமைகளின் வரிசைத் தோற்றத்திற்குக் கருவியாகவுள்ளது. இரவியின் தோற்றமறைவாலேற்படுகின்ற இந்நாளை வைத்தே ஏனைய மாதம், ஆண்டு ஆகிய கால அளவுகளும் அறியப்படுகின்றன.

வானத்தில் விண்மீன்களும் (நக்ஷத்திரங்கள்) கோள்களும் (கிரகங்கள்) நம்மைச் சுற்றிச் சுற்றி வருகிறதை நாம் காண்கின்றோம். விண்மீன்கள் விட்டு விட்டு மின்னி விளங்கும். கோள்களோ எப்போதும் ஒன்றுபோல் ஒளிரும். கோள்கள் ஒன்பது. அவை ஞாயிறு, திங்கள் (சந்திரன்), செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது என்பன. இவைகளெல்லாவற்றிற்கும் முதன்மை பெற்றிருப்பது ஞாயிறே. இவனிடமிருந்தே மற்றைய கோள்களெல்லாம் தோன்றின. இதனாலே இஞ்ஞாயிறு 'கோளரசு' என்ற பெயரால் வழங்கப்பெறுகிறது. ஆதலினாலே ஞாயிற்றுக்கிழமையே முதற்கிழமையாக, ஏனைய திங்கள் முதலிய ஆறு கிழமைகளும் இதன் பின்னரே எண்ணப்பெறுகின்றன. திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஆறு கோள்களும் தங்களுக்கென இயற்கை ஒளி இல்லாதவைகளாய்ப் பகலவனுடைய ஒளியினாலேயே ஒளிபெற்று விளங்குகின்றன. இரவியே இயற்கை ஒளியுடையவனாய் ஏனைய திங்கள் முதலிய கோள்களுக்கும் ஒளிதந்து அவைகளை விளங்கும்படி செய்பவனாயிருக்கின்றான். இதனையே உலகமுய்யத் தோன்றிய பெருந்திருவாளர் மெய்கண்டதேவர் திருவாய் மலர்ந்தருளிய சிவஞானபோதம் ஐந்தாம் சூத்திரம் இரண்டா மதிகரணத்திலுள்ள,

''வெய்யோ னொளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல''

என்ற வெண்பாவுக்குப் பொருள் காணவந்த தமிழ்ப் பேருரையாளர் முனிவர் பெருமான் சிவஞான சாமிகளும்

''நாண்மீன் முதலியவற்றின் ஒளியெல்லாம் ஞாயிற்றானாய ஒளியே'' எனக் குறித்திருக்கின்றனர்.

இராகு, கேது என்ற இரண்டு கோள்களும் கோள்களாக எண்ணப்பெற்றாலும் அவை உண்மையில் உருவில்லாதனவாய் நிழற்கோள் (சாயாகிரகங்)களாக இருக்கின்றன. ஆதலின் உருவுடன் நமது கண்ணுக்குப் புலனாகும் கோள்கள், இவ்விராகு கேதுக்களைத் தவிர, ஞாயிறு முதலிய ஏழுமேயாம். நிழல்களாகிய இவ்விராகு கேதுக்களை ஞாயிறும் திங்களும் மறைகிற (கிரகண) காலங்களில் அவைகளின் மேலே காணலாம். இதனையே சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரம் முன்றாமதிகரணத்தில் வரும்,

''இந்துவிற் பானுவிலி ராகுவைக் கண்டாங்கு''

என்ற செய்யுட்டொடருக்கு மாதவச் சிவஞானமுனிவர் உரை காணுமிடத்து, ''அந்தரத்தியங்கு நவக்கோள்களுள் ஏனைய கோள்போலக் காணப்படாத இராகு கேதுக்களை உபராகத் (கிரணத்)திற் காணுமாறுபோல'' என்றும் ''கேது சாயாக் கிரகமாதலின் வேறு கூறாதிராகுவை யென்றொழிந்தார்'' எனவும் விளக்கிப் போந்தமை காண்க.

இரவி நாம் வாழும் மண்ணுலகத்திலிருந்து தொண்ணூற்றிரண்டு கோடி மைல்களுக்கப்பால் இருக்கின்றான். இவ்விதமாக அளவிலடங்காத தூரத்திலிருந்தாலும் இவ்விரவியே, நாமும் ஏனைய உயிரினங்களும் வாழ்வதற்கு முதற்காரணனாயிருக்கிறான். பகலவனுடைய வெப்பமும் ஒளியுமின்றேல் உலகமுமின்றாம். நாம் வாழும் இம்மண்ணுலகமும் அவனிடமிருந்தே தோன்றியதாகும். அவனுடைய அருளாலேயே மழைபெய்கிறது, காற்று வீசுகிறது, கடலில் நீரிருக்கின்றது, அக்கடலில் நீரோட்டமிருக்கின்றது, குளிர்ச்சியால் தோன்றுகிற பனிக்கட்டிக்கு முதற்காரணமான நல்ல தெளிந்த தண்ணீர் தோன்றுகிறது, பனிக்கட்டிகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக் கோடுகின்றன, மரம் செடி கொடிகள் உணவருந்தி உயிர் வாழ்கின்றன, நாமும் உயிருடன் வாழ்கின்றோம். வெய்யோனின் வெப்பத்தாலேயே பருவக்காலங்கள் தோன்றுகின்றன. அவனுடைய வல்லமையாலேயே விண்மீன்களும் கோள்களும் நின்று நிலவுகின்றன. இவ்வுண்மைகளை யெல்லாம் நன்கறிந்த தமிழ்ப் பெரியார் இப்பகலவனுக்குக் 'கோளரசு' எனத் தந்த பெயர் பொருந்தும், பொருந்தும்.

கோளரசாகிய ஞாயிறும் அதனால் ஒளிபெற்று விளங்கும் ஏனைய ஆறு கோள்களும் விண்ணில் நம்மைச் சுற்றிச்சுற்றி வருகின்றன. விண்ணில் எந்த வழியாக ஞாயிறு நம்மைச் சுற்றி வருகின்றானோ அந்த வழியாகவே மற்றைக் கோள்களும் சுற்றி வருகின்றன. அவ்வழி 'விண்வழி' யென்றும் 'ஞாயிற்றுவழி' யென்றும் கூறப்பெறும். அவ்வழி ஓர் வட்டமாக இருக்கிறது. கோள்கள் நிற்கும் நிலைகளை அளந்தறிவதற்கு இவ்வட்டத்தில் இருபத்தேழு நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நிலைகள் அவ்வழியிலுள்ள அசையாத விண்மீன்களை அடையாளமாகக்கொண்டு அறியப்படுவன. இவைகளுள் முதலாவது நிலை, குதிரைத்தலைபோல் உருவமைந்துள்ள விண்மீன் கூட்டத்தால் அறியப்பெறுவது. இது ஐப்பசி யெனவும் அசுவதி யெனவும் பெயர் பெறும். இரண்டாவது நிலை அடுப்புப்போலுள்ள மூன்று விண்மீன் தொகுதியால் அறியப்பெறுவது. இது அடுப்பு எனவும் பரணி யெனவும் பெயர் பெறும். இவ்வாறே கார்த்திகை முதலிய ஏனைய இருபத்தைந்து நிலையங்களும் ஒவ்வொரு விதமான உருவத்தையுடைய விண்மீன் தொகுதிகளைத் தமக்கு அடையாளமாகக் கொண்டு அறியப்பெறுவதோடு கார்த்திகை முதலிய பெயர்களையும் பெற்றுள்ளன. விண்ணில் இவைகளோடு விளங்கும் ஏனைய அளவிலடங்காத மீன்கள், இரண்டொன்று தவிர, தனிப் பெயரால் அழைக்கப்பெறா.

இவ்வாறு இருபத்தேழு பிரிவுகளாகப் பகுக்கப் பெற்றுள்ள விண் வட்டம், தம்முள் தனித்தனி இரண்டேகால் இரண்டேகால் விண்மீன்களை யுள்ளடக்கிய பன்னிரண்டு பெரும் பகுதிகளாகவும் பிரித்தறியப்படுகிறது. இப்பன்னிரண்டு பெரும் பிரிவுகளிலும் கோள்கள் வாழ்கின்றபடியால் இவைகள் வீடு (இராசி)களென்று பெயர் பெறுவன. இவ்வீடுகள் பன்னிரண்டும் பின்வருவன:- ஆடு (மேடம்), எருது (இடபம்), இரட்டை (மிதுனம்), நண்டு (கற்கடகம்), சிங்கம் (சிம்மம்), கன்னி (கன்யா), துலை (துலாம்), வண்டு (விருச்சிகம்), வில் (சாபம்), சுறா (மகரம்), குடம் (கும்பம்), மீன் (மீனம்). இவ்வீடுகள் ஒவ்வொன்றிலும் ஞாயிறு வாழ்கின்ற கால அளவே மாதங்களாம். இம்மாதங்கள் தனித்தனி இருபத்தொன்பது முதல் முப்பத்திரண்டு நாட்கள் வரையுள்ள கால அளவாம். இரவி ஒவ்வொரு வீட்டிலும் வாழும் கால அளவு பின்வருமாறு:-

| | நாள் | நாழிகை | விநாடி |
|---|---|---|---|
| (௧) ஆடு | ௩௰ | ௫௫ | ௩௨ |
| (௨) எருது | ௩௧ | ௨௪ | ௰௨ |
| (௩) இரட்டை | ௩௧ | ௩௬ | ௩௨ |
| (௪) நண்டு | ௩௧ | ௨௮ | ௰௨ |
| (௫) சிங்கம் | ௩௧ | ௨ | ௰ |
| (௬) கன்னி | ௩௰ | ௨௭ | ௨௨ |
| (௭) துலை | ௨௯ | ௫௪ | ௭ |
| (௮) வண்டு | ௨௯ | ௩௰ | ௨௪ |
| (௯) வில் | ௨௯ | ௨௰ | ௫௩ |
| (௰) சுறா | ௨௯ | ௨௭ | ௰௬ |
| (௰௧) குடம் | ௨௯ | ௪௮ | ௨௪ |
| (௰௨) மீன் | ௩௰ | ௨௰ | ௨௧ |
| **ஆக மொத்தம்** | **௩௬௫** | **௰௫** | **௩௧** |

இந்த அளவு எக்காலத்திலும் ஒரேமாதிரியாக இருக்கும். இது பண்டைக் காலந்தொட்டுத் தமிழ்மக்கள் கொண்டுவரும் மாதங்களின் அளவாம். இம்மாதங்களுக்கு அவ்வவ்வீட்டின் பெயரே பெயராம்.

ஞாயிறு நம்முடைய கண்ணுக்கு நம்மைச் சுற்றிவருவதுபோற் காணப்படினும் அவன் உண்மையில் சுற்றுவதில்லை. நாம் வாழும் பூமியே இரவியைச் சுற்றிவருகிறது. பூமி அவனைச் சுற்றிவருவதோடு தன்னையும் சுற்றிக்கொள்கிறது.

இது தன்னை ஒருமுறை சுற்றும் காலமே ஓர் நாள். இது பகலவனை ஓர் முறை சுற்றிவரும் காலமே நாம்

மேலேகாட்டிய பன்னிரண்டு மாதங்களாம். இப்பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்து நாம் மேலே குறித்தபடி **நசுரு** நாள் - **யரு** நாழிகை - **நக** விநாடிகளாம். இப்பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்து ஓர் ஆண்டு என்று பெயர் பெறும். என்றும் மாறாது ஒரே அளவினவாக உள்ள இம்மாதங்களிலேயே பண்டைத் தமிழ் மக்கள் திருவிழாக்களும் நன்னாட்களும் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். இக்கணக்கு முறை இரவிப்போக்கால் ஏற்படுவதாதலால் இரவிக்கணக்கு எனப்பெறும். இது வடமொழி வழக்கில் சௌரமானம் அல்லது சூரியமானம் எனப்படுகிறது. மானம் - கணக்கு.

தமிழ் மக்கள் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே பூமிதான் இரவியைச் சுற்றி வருகிறதென்ற உண்மையை அறிந்தவராதலின், அவ்வுண்மை பற்றியும் தமது மாதங்களுக்குப் பெயரமைத்திருக்கின்றனர். அவை சித்திரை (ஆட்டிரவி), வைகாசி (எருதிரவி), ஆனி (இரட்டையிரவி), ஆடி (நண்டிரவி), ஆவணி (சிங்கவிரவி), புரட்டாசி (கன்னியிரவி), ஐப்பசி (துலையிரவி), கார்த்திகை (வண்டிரவி), மார்கழி (வில்லிரவி), தை (சுறாவிரவி), மாசி (குடவிரவி), பங்குனி (மீனிரவி) என்பன. இப்பெயர்களை அமைப்பதற்குக் காரணம் பின்வருவது.

ஞாயிறு எந்த வீட்டில் நுழைவதுபோலக் காணப்படுகின்றானோ அவ்வீட்டிற்கு நேர் ஏழாவது வீட்டில் பூமி நுழையும். அவ்வாறு பூமிபுகும் அவ்வீட்டின் முதலிலுள்ள விண்மீனின் பெயரே அம்மாதத்தின் பெயராக அமைந்துள்ளது. முதல் வீடாக ஆட்டு வீட்டில் ஞாயிறு நுழைவதுபோலத் தோன்றும்போது, பூமி அதற்கு நேர் ஏழாவது வீடாகிய துலையில் நுழையும். துலைவீட்டின் முதலிலிருப்பது சித்திரை யென்ற பெயரையுடைய விண்மீன். ஆதலின் ஆட்டிரவி என்ற மாதம் சித்திரை மாதம் என்ற பெயரைப் பெற்றது. ஞாயிறு இரண்டாவது வீடாகிய எருதிற் புகுவதுபோலத் தோன்றும்போது, பூமி அதற்கு நேர் ஏழாவது வீடாகிய வண்டிற்புகும். வண்டு வீட்டின் முதலிலிருக்கும் மீன், வைகாசி (விசாகம்) என்பது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீன் (யஉ)<br>(மீனம்) | ஆடு (க)<br>(மேடம்) | எருது (உ)<br>(இடபம்) | இரட்டை (ந)<br>(மிதுனம்) | |
| | (சு)**புரட்டாசி** ¼<br>உத்திரட்டாதி 1<br>ரேவதி 1 | (எ) **ஐப்பசி** 1<br>(அசுவதி)<br>பரணி 1<br>கார்த்திகை ¼ | (அ)**கார்த்திகை** ¾<br>உரோகிணி 1<br>மார்கழி ½<br>(மிருகசீரிடம்) | (கூ) **மார்கழி** ½<br>திருவாதிரை 1<br>தை ¾<br>(பூசம்) | |
| குடம் (யக)<br>(கும்பம்) | (ரு) **ஆவணி** ½<br>சதயம் 1<br>புரட்டாசி ¾<br>(பூரட்டாதி) | **விண்வட்டம்** | | (ய) **தை** ¼<br>புணர்தை 1<br>ஆயிலியம் 1 | நண்டு (ச)<br>(கற்கடகம்) |
| சுறா (ய)<br>(மகரம்) | (ச) **ஆடி** ¾<br>திருவோணம் 1<br>ஆவணி ½<br>(அவிட்டம்) | | | (யக) **மாசி** 1<br>(மகம்)<br>பூரம் 1<br>பங்குனி ¼<br>(உத்தரம்) | சிங்கம் (ரு)<br>(சிம்மம்) |
| | (ந) **ஆனி** 1<br>(மூலம்)<br>பூராடம் 1<br>ஆடி ¼<br>(உத்தராடம்) | (உ) **வைகாசி** ¼<br>அனுடம் 1<br>கேட்டை 1 | (க) **சித்திரை** ½<br>சுவாதி 1<br>வைகாசி ¾<br>(விசாகம்) | (யஉ) **பங்குனி** ¾<br>அத்தம் 1<br>சித்திரை ½ | |
| | வில் (கூ)<br>(சாபம்) | வண்டு (அ)<br>(விருச்சிகம்) | துலை (எ)<br>(துலாம்) | கன்னி (சு)<br>(கன்னியா) | |

ஆதலின் எருதிரவி வைகாசிமாதம் என்ற பெயரைப் பெற்றது. இவ்வாறே ஏனைய மாதங்களும் பூமிபுகும் அவ்வவ் வீட்டின் முதலிலுள்ள விண்மீனின் பெயரே தமக்கும் பெயராகப் பெற்றன. விண்வட்டத்தின் அமைப்பை உணர்த்தும் கட்டம் பின்வருவது. அது வட்ட வடிவினதேனும் எளிதில் அமைப்பதற்காக அதை நாற்கோணமாக அமைத்தெழுதுவது உலக வழக்கம்.

மேலே கண்ட வட்டத்தில் பன்னிரண்டு வீடுகளும் அவ்வீடுகளில் இருபத்தேழு விண்மீன்களும் அமைந்து நிற்கும் நிலையும் தெளிவாக விளங்குவது காண்க. பண்டைக்காலத்தில் விண்மீன் வரிசையில் தை (பூசம்)யின் பின்னரே அதைப்புணரும் தை அதாவது புணர் தை (புணர்பூசம்) அமைந்திருந்தது. தற்கால வழக்கில் அம்முறைமாறி, புணர் தையின் பின் தை வழங்கி வருகிறது. முன்னிருக்கும் பொருளையே பின்னிருக்கும் பொருள் புணர்வதாகும். இதுவே இயற்கை. இவ்வியற்கைக்கு முற்றிலும் மாறாகத் தற்கால வழக்கு இருக்கிறது.

முகம்மதியர்கள் எவ்வாறு காலத்தை மதிக்கின்றனரெனப் பார்ப்போம்.

முகம்மதியர் நாள், மாலை முதற்றொடங்கி மறு மாலைவரை வருமென முன்னர் ஆராய்ந்தோம். இவர்கள் திங்களின் வளர்ச்சி தளர்ச்சியைக் கொண்டு காலத்தை மதிக்கிறார்கள். பூமியைப் போலவே திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்களெல்லாம் இரவியைச் சுற்றி வருகின்றன. இரவியோ இக்கோள்களுக்கெல்லாம் நடு நாயகமாய் அளவிலடங்கா ஒளியுடன் அரசாய் விளங்குகின்றான். திங்கள் முதலிய கோள்கள் என்றும் இயற்கை ஒளியற்றனவாய் வெய்யோனின் ஒளி தம்மேல் விழுவதனாலே கண்ணாடிபோல அவ்விரவியொளியையே வெளி வீசுகின்றன. இவைகளுள் திங்கள் மட்டும் பகலவனைச் சுற்றுவதோடு நில்லாமல் பூமியையும் சுற்றிச் சுற்றி வருகிறது. கோளரசாகிய ஞாயிற்றின் முன்னிலையில் திங்கள் ஓர் மின்மினிபோலும் என்று கூறுதற்கேனும் இடனின்றாம்.

திங்கள் வளர்தலையும் தேய்தலையும் உடையது. திங்கள் தேய்ந்து தேய்ந்து முற்றிலும் மறைந்து பின் வளரத் தொடங்குகிறது. முற்றிலும் மறைந்து பின் அது மூன்றாம் நாளே கண்ணுக்குத் தெரியத் தொடங்கும். அந்நாள் மூன்றாம் பிறை (திருதியை) என்று சொல்லப்பெறும். அந்நாளே முகம்மதியர்களுடைய மாதத்தின் முதல் நாளாகும். முகம்மதியர்களுடைய மாதங்கள் பின் வருவன: **க.** மொகரம், **உ.** சபர், **ந.** ரப்யூலவ்வல், **ச.** ரப்யூசானி, **ரு.**ஜமாதிலவ்வல், **சு.** ஜமாதிசானி, **எ.** ரஜப், **அ.** ஷாபான், **கூ.** ரம்ஜான், **ய.** ஷவ்வால், **யக.** ஜில்ஹாத், **யஉ.** ஜில்ஹேஜ்

முகமதுநபி என்ற பெரியாரே முகம்மதிய சமயத்தை நிலைநாட்டியவர். அவர் வாழ்ந்த நாடு அரேபியா என்பது. அந்நாட்டில் அவர் தாம் வாழ்ந்துகொண்டிருந்த ஊராகிய மெக்காவிலிருந்து மெடீனா என்ற ஊருக்குப்

போன காலமாகிய கி.பி. 622 சூலை மாதம் 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை முதல் முகம்மதியர்களுடைய ஆண்டு தொடங்குகிறது. அன்றே அவர்கள் மொகரம் மாதத்தின் முதல் நாளாம். முகம்மதியர்களுடைய மாதம் இருபத்தொன்பது அல்லது முப்பது நாட்களையுடையது. இவர்களுடைய ஆண்டு ஹிஜரி எனப்படும். இது **௩௫௪** நாள் - **௪௮** நாழிகை **௯** விநாடியையுடையது. இக்கணக்குப்படி இவ்வாண்டு பெரும்பாலும் **௩௫௪** நாட்களையுடையதாக இருக்கும். ஆனால் முப்பது ஆண்டு கொண்ட ஒரு வட்டத்தில் **௨, ௫, ௭, ௰, ௰௩, ௰௬, ௰௮, ௨௧, ௨௪, ௨௬, ௨௯.** இந்தத் தொகை மீதம் வருகிற ஆண்டுகளில் **௩௫௫** நாட்களையுடையதாக இருக்கும்.

ஞாயிற்றை வைத்துக் காலத்தைக் கணக்கிடும் தமிழ்மக்களின் மாதங்களோடு சேரவேண்டுமென்ற கட்டுப்பாடில்லாமல், முகமதியர்கள் தங்கள் மாதத்தையும் ஆண்டையும் பிறைப்போக்கிலேயே விட்டு விடுகின்றனர். அதனால் ஹிஜிரியின் தொடக்கமாகிய மொகரம் மாதம், நமது தமிழ் மாதங்களில் வேறு வேறு மாதங்களில் தொடங்கும். நமது தமிழ் ஆண்டைக் காட்டிலும் முகம்மதியருடைய ஆண்டு ஏறத்தாழப் பதினொரு நாள் குறைவாக இருக்கிறபடியால், இவர்களுடைய ஆண்டுப் பிறப்பு பின் நோக்கியே வரும். அதாவது சென்ற கி.பி. 1890இல் மொகரம் மாதம் ஆவணி மாதம் 4ஆம் நாள் பிறந்தது; 1891இல் ஆடி மாதம் 24ஆம் நாள் பிறந்தது. இவ்வாறு பின் நோக்கிச்சென்று 1898இல் வைகாசி மாதத்திலும் 1904இல் பங்குனி மாதத்திலும், 1906இல் மாசி மாதத்திலும் 1909இல் தை மாதத்திலும் பிறந்தது; பின் 1914இல் கார்த்திகை மாதத்திலும், 1918இல் புரட்டாசியிலும், 1922இல் பழையபடி ஆவணி மாதம் 9 அன்றும் பிறந்தது. இவ்வாறாக 1890இல் ஆவணி மாதம் 4ஆம் நாள் பிறந்த முகம்மதிய ஆண்டின் முதன் மாதமாகிய மொகரம், மறுபடி அந்த ஆவணி மாதத்தில் அதனிலும் 4ஆம் நாளில்லாமல் 9ஆம் நாள் பிறக்க, முப்பத்திரண்டு ஆண்டுகளாகியிருக்கின்றன. பின் 1923இல் ஆடி மாதத்திலும், 1926இல் ஆனி மாதம் 7ஆம் நாளிலும் பிறந்திருக்கிறது. இதற்குக் காரணம் இரவியாண்டிலும் திங்கள் யாண்டு ஏறத்தாழப் பதினொரு நாள் குறைந்திருப்பதே. இதனால் ஏறத்தாழ இரவிக் கணக்கில் இரண்டாண்டு எட்டு மாதங்களுக்கொருமுறை திங்கள் யாண்டு ஏறக்குறைய முப்பது நாள் பின்னடைகிறது. இக்கணக்கின்படியேதான் இரவிக்கணக்கு (சௌரமான) மாத மொன்றில் தொடங்கும் முகம்மதிய ஆண்டு, மறுபடி அதே மாதத்தில் தொடங்க ஏறக்குறைய முப்பத்திரண்டாண்டுகளாகின்றன என்பதை மேலே எடுத்துக் காட்டினோம்.

முகம்மதிய சமயத்தினர் எவ்வாறு இத்திங்கள் மாதத்தைக் கொள்கின்றனரோ அதைப் போலவே சுமார்த்த சமயத்தினராகிய ஆரியர்களும் இதையே கொள்கின்றனர். ஆனால் இவர்கள் கொள்ளும் முறை முகம்மதியர்கள் கொள்ளும் முறையினின்றும் பல வேறு வகையில் மாறுபடுகின்றன. திங்கள் உண்மையில் கண்ணுக்குத் தோன்றுமளவு ஒளி பெற்று விளங்கும் மூன்றாம் பிறையை மாதத்தின் முதல் நாளாகக் கொள்வதை விடுத்து இவர்கள் அது உண்மையில் ஒளி பெறும் முதற் பிறையையே தமது மாதத்தின் முதல் நாளாகக் கொள்கின்றனர்.

இவ்வாரியர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வட நாட்டிலிருந்தனர். அப்போது அவர்களுக்குத் தமிழ் மக்களுடைய காலக் கணக்கு முறையொன்றும் தெரியாது. கோள்களில் மிகவும் சிறியதாய், இயற்கை யொளி யற்றதாய், பலவிதமாகச் சுற்றித் திரிவதாய், வளர்ச்சி தளர்ச்சியுடையதாய் உள்ள திங்கள் ஒளியற்றதாய் மறைந்திருக்கும் நாளே இருள்மதி (அமாவாசை) யெனப்படும். அதன் மறுநாள் முதல் அது கொஞ்சங் கொஞ்சமாக ஒளி பெற்று வளர்கிறது; பதினைந்தாம் நாள் முழு ஒளியுடன் விளங்குகிறது. அன்று நிறைமதி (பௌர்ணமி அல்லது பூரணை) எனப்பெறும். மறுநாள் முதல் அது கொஞ்சங் கொஞ்சமாக ஒளி குறைந்து குறைந்து, பதினைந்தாம் நாள் ஒளி கொஞ்சமும் இல்லாமல் மறைந்து விடுகிறது. இவ்வாறாகத் திங்கள் ஒளிபெறத் தொடங்கி முழு ஒளி பெற்றுப் பின் முழுவதும் ஒளி யறுவது வரையுள்ள காலத்தை, இவ்வாரியர்கள் ஓர் மாத மென்று கொண்டனர். இவர்கள் பல்கித் தென்னாடடைந்தனர்; அடைந்தபோது தமிழ் மக்களுடைய மதிநுட்பத்தையும் கணித முறைகளையும் கண்டு வியந்து, தாமும் தமிழ் மக்களுடைய விழாக்கள் நோன்புகளையும் கையாளத் தொடங்கியதோடு தமது நாட்களையும் தமிழ் மக்கள் கணக்காகிய இரவிக்கணக்கு (சௌரமான) முறையின்படியுள்ள மாதங்களிலேயே கொண்டு நடக்கத் தலைப்பட்டனர்.

திங்களின் கணக்குப்படி ஒழுங்கான முறையில் தம் ஆண்டு மாதம் முதலியவைகளைக் கணக்கிடும் முகம்மதியர்கள் போலல்லாமல், இவ்வாரியர்கள் தங்கள் திங்கட் கணக்கைவிட இரவிக்கணக்கு உயர்ந்ததென்றும், நிலையுள்ளதென்றும் போதுமானதென்றும் கண்டு அதனால் தங்கள் மாதத்தையும் இரவிக் கணக்கு மாதங்களோடு சேர்த்தனர். தமிழ்மக்களோடு சேருமுன்னர் அவர்களுடைய மாதங்களுக்குப் பெயர் கிடையாது. முகம்மதியர்களோ தங்கள் மாதங்களுக்கு மொகரம் முதல் தனிப்பெயர்களைத் தந்து வழங்கி வருகின்றனரென்பதை முன்னர்க் கண்டுள்ளோம். அவ்வாறல்லாமல் சுமார்த்தர்களாகிய ஆரியர்கள் தங்கள் ஆண்டினை இரவிக்கணக் காண்டோடு சேர்க்க எண்ணியதற்கேற்ப இரவிக்கணக்கு மாதங்களின் பெயர்களையே தங்கள் திங்கட் கணக்கு (சாந்திரமான) மாதங்களுக்கும் பெரும்பான்மை திரித்தும் சிறுபான்மை மாற்றியும் வழங்குவாராயினர்.

அவர்கள் சித்திரையைச் சைத்திரமென்று திரித்தும் அதைப்போலவே வைகாசியை வைசாகமென்றும், ஆனியை ஆஷாடமென்றும் ஆவணியைச் சிராவணமென்றும் புரட்டாசியைப் பாத்திரபதமென்றும் ஐப்பசியை ஆஸ்வீஜமென்றும் கார்த்திகையைக் கார்த்தீகமென்றும், மார்கழியை மார்கசீர்ஷ மென்றும், மாசியை மாகமென்றும், பங்குனியைப் பால்குன மென்றும் திரித்தனர். ஆனியை ஜேஷ்டமென்றும் தையைப் புஷ்யமென்றும் மாற்றினர். இதனிலும் இவர்கள் மாற்றிய தன்மை புலனாகிறது. தை என்பது பூசமென்ற

பெயரையுடையது. பூசமென்ற பெயரையே இவர்கள் புஷ்யமெனத் திரித்தனர். மேலும் இப்புஷ்யத்துக்கு மறு பெயராகிய தை யென்பதையே ''தைஷீ'' எனத் திரித்தும் வழங்கத் தொடங்கினர்.

தைஷீ என்பதே முதலில் ஏற்பட்டது. இதுவும் மற்றையவைகளைப் போலவே நேர்திரித்தலென்பதைக் காட்டாமல் மறைக்கவே புஷ்யமென்பதை உலக வழக்குக்குக் கொண்டுவந்து தைஷீ என்பது செய்யுள் வழக்களவிலேயே இருக்கும்படி அவர்கள் செய்துவிட்டனர் போலும். ஆனிப் பெயரைமட்டும் முற்றிலும் மாற்றியிருக்கின்றனர். இதிலும் இவர்கள் கேட்டையறிவிக்கும் விண்மீனாகிய கேட்டையின் பெயரையே ஜேஷ்டையெனத் திரித்தவராவர். இது, தனி மாதிரியாகத் தாம் மாதப்பெயரமைத்தனரென உலகினர்க்குக் காட்டற்குச் செய்ததுபோலும்!

இவ்வாரியர் தமிழ்மாதப் பெயர்களையே இவ்வாறு திரித்துக்கொண்டதோடு கூட, அந்தந்தப் பெயரையுடைய மாதம் அந்தந்த இரவி மாதத்தோடு ஒற்றுமைப்பட்டு முடியவேண்டுமெனவும் ஏற்பாடு செய்துகொண்டனர். தொடக்கம் முன் மாதத்திலிருக்கலாம். இதனால் இவர்கள் முடிவையே முதன்மையாகக் கொண்டனர், தொடக்கத்தை முதன்மையாகக் கொள்ளவில்லை யென்பது தெளிவாகிறது. இவ்வாறு கொள்ளும்போது முன் நாம் முகம்மதிய மாதங்களைப்பற்றிக் கூறியபோது குறித்தாங்கு இரண்டாண்டு எட்டு மாதங்களுக்கொருமுறை முப்பது நாள் குறைவதால், தமிழ் மாதத்திலே இரண்டு இருள்மதிகள் (அமாவாசைகள்) வரும். அப்போது முதல் இருள்மதியோடு அத்தமிழ் மாதப் பெயரைக்கொண்ட திங்கட்கணக்கு (சாந்திரமான) மாதமும் இரண்டாவது இருள் மதியோடு அதற்கடுத்த தமிழ் மாதத்தின் பெயரைக்கொண்ட திங்கட் கணக்கு மாதமும் முடிவடையும். அதனால் இரண்டாவது இருள்மதியோடு முடிவடையும் திங்கட் கணக்கு மாதம் அதற்குரிய அடுத்த தமிழ் மாதத்தோடு சேராமற்போகிறது. இது தங்கள் ஏற்பாட்டிற்கு மாறாதலினாலே முதல் இருள்மதியின் பின் தொடங்கி இரண்டாவது இருள்மதியோடு முடிகிற திங்கட் கணக்கு மாதத்தை அதிக மாதம் அல்லது பொய் என்று தள்ளிவிட்டு, இரண்டாவது இருள்மதியின் பின்தொடங்கி மறு தமிழ் மாதத்திலுள்ள இருள்மதியோடு முடிவாகிற திங்கட்கணக்கு மாதத்தையே நிசமாதம் அதாவது உண்மையான மாதமென்று கொள்கின்றனர்.

தற்காலத்தில் வடநாட்டில் இந்தத் திங்கட்கணக்கு மாதத்தைக் கொண்டு நடப்போர் சிலரிருந்தாலும் தமிழ் நாட்டில் இதைக் கொண்டு நடப்போர் ஒருவருமிலர். ஆதலின் இத்தென்னாட்டில் திங்கட் கணக்கு (சாந்திரமானம்) பேச்சளவிலேயே யிருக்கிறது. நிகழும் விபவ ஆண்டில் (கி.பி. 1928) ஆடி மாதத்தில் இரண்டு இருள் மதிகள் வந்தன. அவை முதல் நாள் ஒன்றும் முப்பத்தோராம் நாள் ஒன்றுமாம். ஆதலின் 2 நாள் முதல் 31 நாள் முடியவுள்ள ஆடி மாதம் அதிக மாதம் அல்லது பொய் மாதமென்று அவர்கள் கூறுவர். அதனால் அம்மாதத்தை அவர்கள் தள்ளிவிடுதல் வேண்டும். ஆடி மாதத்திற் பிறந்த எந்த ஆரியராவது தமது பிறந்த நாளைத் தமது ஆஷாடமாதம் வருகிற தமிழ் ஆனியில் செய்ததுண்டா? அல்லது தமிழ் ஆடியிற் செய்யாமல் விடுத்ததுண்டா? ஆடி மாதத்தில் இறந்த தமது தந்தைக்கோ தாய்க்கோ இறந்த நாளை (திதியை) எவராவது தமிழ் ஆனி மாதத்திற் செய்ததுண்டா? அல்லது தமிழ் ஆடி மாதத்தில் செய்யாமல் விடுத்ததுண்டா? தமிழ் ஆடி மாதத்தில் ஆரியருடைய அதிக மாதம் வந்ததால் ஆடிப்பூரம் முளைக்கொட்டுத் திருநாள் எந்தக் கோவிலிலாவது இவ்வாண்டில் வேறு மாதத்தில் நடைபெற்றதுண்டா? இல்லை, இல்லை; ஆடிப்பூரம் முளைக்கொட்டுத் திருவிழா ஆடி மாதத்திலேயே நடைபெற்றது. சங்கர நயினார் கோவில் முதலிய ஊர்களில் நடைபெறும் ஆடித் தபசுத் திருவிழா ஆடி மாதத்திலேயே நடைபெற்றது. வைணவர்களும் வில்லிபுத்தூரில் ஆண்டாளுக்கு ஆடித்திருவிழாவை ஆடி மாதத்திலேயே நடத்தி மகிழ்ந்தனர். சென்ற ஆடி மாதத்தில் தமது கணக்குப்படி அதிக மாதம் வந்தது. அதனால் அம்முப்பது நாளும் பொய்யான காலம் என ஆரியர் எவராவது அக்காலத்தில் உண்ணாதும் உறங்காதும் இருந்ததுண்டா? இல்லை, இல்லை. ஆடி இருள்மதி, நிறைமதி, கார்த்திகை முதலிய எல்லா நோன்புகளும் ஆடி மாதத்திலேயே கொள்ளப் பெற்றன. இந்த இருள்மதி முதலியவைகளை, வடநாட்டில் சிலர் திங்கட் கணக்கைக் கொண்டு வருகின்றனரெனக் கூறினோமே, அவர்களுங்கூடக் கைவிடாது கொண்டனர். இதனால் அதிக மாதமென்பது தமிழ் மக்களுக்குக் கிடையாதென்பதும் அது உண்டு எனக் கூறும் ஆரிய மக்களும் அதைக் கொள்ளாமல் பேச்சளவிலேயே வைத்திருக்கின்றன ரென்பதும் தெளிவாகின்றன.

திங்கட் கணக்கு முறையால் வரும் இடையூறுகளில் ஒன்று காட்டுதும். விரியுமாதலின் பல இங்கே காட்ட இடமில்லை. சித்திரை மாத வளர்பிறை ஒன்பதாம் (நவமி) நாளே இராமன் பிறந்த நாளென்பார் வைணவர். அந்நாள் (இராம நவமி) இத்திங்கட் கணக்கு முறைப்படி சில ஆண்டுகளில் இல்லாமலே போகிறது. சித்திரை மாதத்திற் பிறந்த இராமனுக்குப் பிறந்த நாள் சில ஆண்டுகளில் சித்திரை மாதத்திலும் சில ஆண்டுகளிற் பங்குனி மாதத்திலும் நடைபெறுகிறது. சென்ற குரோதன ஆண்டில் சைத்திர மென்ற ஆரிய மாதத்தின் வளர்பிறைக் காலம் தமிழ்ச் சித்திரை மாதத்தில் இராமநவமி இல்லை. அவ்வாண்டின் ஈற்றதாகிய பங்குனியில் இரண்டு இருள்மதிகள் வந்துவிட்டபடியால் அதைப் பொய் மாதமென்று பஞ்சாங்கம் கணித்து வெளிவிடும் ஆரியச் சுமார்த்தர் தள்ளிவிட்டனர். ஆதலினாலே அக் குரோதன ஆண்டில் இராமநவமியே இல்லாதொழிந்தது. அப்பிறந்த நாள் விழா அதற்கடுத்துவந்த 'அட்சய' ஆண்டில் சித்திரை மாதம் 9ஆம் நாளும் பங்குனி மாதம் 28ஆம் நாளும் ஆக இரண்டுமுறை கொண்டாடப்பெற்றது. இதனால் இராமன் பிறப்பு, குரோதன ஆண்டில் இல்லாதொழிந்ததற்காக அதற்கடுத்த அட்சய ஆண்டில் இரண்டுமுறை இராமன் பிறந்ததாகக் கொண்டாடப்பட்டது. இவ்விடையூறெல்லாம் இவ்வாரிய முறையால் வந்ததே. இவர்கள் முகம்மதியரைப் போலத் தங்கள் மாதக் கணக்கை ஒழுங்கான முறைப்படி கொண்டிருந்தனரேல் இவ்வின்னலெல்லாம் விளையா. இரவிக் கணக்கினரான சைவர்களைப்போலவே

தமிழ்மக்களாகவும் இரவிக் கணக்கினாராகவுமுள்ள வைணவச் சமயத்தினர் இதனை நன்கு சிந்தித்துப் பார்த்து உரிய காலத்தைக் கொள்வாராக.

சுமார்த்த சமயத்தினராகிய ஆரியர்கள் மேலே கண்டபடி தங்கள் திங்கட் கணக்கு மாதத்தைத் தெரிந்து கொள்வதற்காகச் செய்துகொண்ட ஏற்பாட்டையே விதியாக எழுதிக்கொண்டிருந்தனரென்றால் மிகவும் நலமாக இருந்திருக்கும். அவ்வாறு செய்துகொள்ளாமல் அவர்கள் தங்கள் சைத்திரம், வைசாகம் முதலிய பேர் கொண்ட மாதங்களின் தோற்றத்துக்கு வேறு வகையான விதியெழுதத் தொடங்கினர். அவ்விதிகள் உண்மையான காரணத்தோடு எழுதப் பெறாமையால் ஒருவகையானும் பொருத்த மற்றவைகளாக உள்ளன.

பாணினி என்பவரே முதன் முதலில் இவ்விதியெழுதியவர். அவர் தாம் எழுதிய இலக்கண நூலாகிய பாணினீயத்தில் நான்காவது அத்தியாயம் இரண்டாவது பாகத்தில் ''நிறைமதி சேர்ந்த விண்மீனின் பெயராலே மாதம் அறியப்படுகிறது'' என்று கூறுகிறார். வடமொழி நிகண்டாகிய அமரம் காலவர்க்கத்திலேயே இதையே விவரமாகக் கூறியிருக்கிறது. அதாவது இன்னின்ன விண்மீனில் நிறைமதி வருதலினாலே இன்னின்ன பெயர் உண்டாயிற்று என்பதாம். எடுத்துக்காட்டாக இங்கே ஒன்று கூறுவோம். அமரம் காலவர்க்கத்தில் ''புஷ்யயுக்தா பௌர்ணமா பௌஷீமாஸீது யத்ரஸா'' என ஓர் சொற்றொடர் உள்ளது. இதன் பொருள் ''பூசமென்ற (தை) விண்மீனோடு நிறைமதி சேர்ந்த அது புஷ்ய மாதமெனப்படும்'' என்பது. புஷ்யமென்றும் தைஷீ என்றும் வடமொழியில் பெயர்பெற்ற மாதத்திற்குப் பேர் வந்த காரணம் புஷ்ய (பூச) மென்ற விண்மீனோடு நிறைமதி சேர்ந்ததேயாகும். இக்காரணம் பாணினீய இலக்கணத்துக்கு மாறுபடுகின்றது. எவ்வாறெனில், தை மாதத்தில் நிறைமதி வருநாளிலும் வருகிறது; புணர் தையிலும் வருகிறது. இன்னும் முன்பின்னுள்ள விண்மீன்களிலும் வருகிறது. அதனால் பாணினீயப்படி எந்தெந்த விண்மீனோடு நிறைமதி சேர்கிறதோ அந்த விண்மீனின் பெயரை அவ்வம்மாதம் பெறவேண்டும். இதன்படி நிறைமதி புஷ்யத்தில் வந்தபோதுதான் புஷ்யமாத மென்னும் பெயர் ஆகுமேயன்றி வேறு விண்மீன்களில் நிறைமதி வரும் ஆண்டுகளில் இம்மாதம் அவ்வவ் விண்மீன்களின் பெயராலேயே வழங்கப்பெறல் வேண்டும். ஆதலினாலே குறித்த ஒருபெயரையே ஒவ்வொரு மாதத்துக்கும் கூறும் அமரம் அவ்வாறு கூறாது பொதுப்படக் கூறும் பாணினீயத்தோடு முரண்படுகின்றது. பாணினீயத்திற் கூறப்பெற்றுள்ள விதியின்படி மற்றொரு இடையூறு உண்டாகிறது. அதாவது நிறைமதி எப்போதும் இரண்டு விண்மீன்களைச் சேர்ந்தேவரும். ஆதலின் ஒவ்வொரு மாதமும் இரண்டிரண்டு விண்மீன்களின் இணைப்பெயராலேயே அழைக்கப்பெறல் வேண்டும்.

பாணினீயத்திற்குப் பிற்பட்ட நூல் அமரம். அமரத்திற்குப் பிற்பட்ட நூல் சூரியசித்தாந்தம். இச்சூரிய சித்தாந்தம் கூறும் விதியோ மிகவும் விந்தையாக இருக்கிறது. இந்நூலின் இறுதி அத்தியாயம் பதினைந்தாவது சுலோகம் ''நிறைமதியின் முடிவு எந்த விண்மீனோடு சேர்கிறதோ அந்த விண்மீனின் பெயராலேயே அம்மாதம் அறியப்படும்'' எனக் கூறுகிறது. இதற்கடுத்த பதினாறாவது சுலோகம் இன்னின்ன மாதத்தில் இன்னின்ன விண்மீன்களில் நிறைமதி வரும். நிறைமதி எந்நாளில் வந்தாலும் முன்னாலிடப்பெற்ற சைத்திரம் முதலிய பெயர்களே பெயர்களாம்'' எனக் கூறுகிறது. இப்பதினாறாவது சுலோகத்திற் கூறப்படுகிற விண்மீன்களைத் தவிர வேறு விண்மீன்களிலும் நிறைமதி வருகிறது. அவைகளையும் சேர்த்து விதியியற்றும் வடமொழி ஆசிரியர் இதுவரை தோன்றினாரில்லை போலும்!

ஆதலின், மேலே கூறிய பாணினீயமும் அமரமும் சூரிய சித்தாந்தமும் தம்முட் பலவகையிலும் மாறுபடுகின்றமையினாலே ஆரியர்கள் மாதப் பெயர்களைத் தகுந்த காரணங்கொண்டு அமைக்கவில்லை யென்ற உண்மை புலனாகிறது. தமிழ் மக்கள் சித்திரை முதலிய பெயர்களை ஒருநாளும் மாறாத எக்காலத்திலும் பொருந்தும் காரணங்கொண்டு அமைத்திருக்கின்றனர். ஆகையினாலே தமிழ்ப் பெயர்களாகிய சித்திரை, வைகாசி முதலியவைகளையே ஆரியர் சைத்திரம், வைசாகம் முதலிய பெயர்களாகத் திரித்து வழங்குவாராயினர் என நாம் முன்னர் விவரித்துக் கூறியது உண்மையே யாயிற்று.

இரவிக் கணக்கு மாதமொன்றில் இரண்டு இருள்மதி வந்தது. அவ்விரண்டுக்கும் இடைப்பட்டு வருகிற காலத்தையே அதிக மாதம் அல்லது பொய் மாதம் என்று ஆரியர் கூறுகின்றனரென மேலே கூறினோம். இவ்வாறு தங்கள் திங்கள் மாதத்துக்கு இரவி மாதப் பெயரையே திரித்துக் கொடுத்து அவ்வாறு பெயர் கொண்டது உண்மையான இரவி மாதச் சேர்க்கையைப் பெற வேண்டுமென ஏற்பாடு செய்துகொள்வதற்கு முன்னரே பாணினீயம், அமரம், சூரிய சித்தாந்தமாகிய நூல்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் இக்காலத்திலும் வழங்கிவரும் இவ்வேற்பாட்டை அந்நூல்கள் கூறவில்லை. ஆதலின் அக்காலத்தில் அவை பெயர்க் காரணங் கூறத் தலைப்பட்டது தாங்கள் திரித்துக் கொண்ட இம்மாதப் பெயர்களுக்கேயாம் எனத் தெளியலாம். இதனாலும் அவர்கள் தமிழ் மாதங்களையே அக்காலத்தில் கொண்டிருந்ததோடு அவைகளையே இவ்வாறு திரித்து வழங்கினவராவ ரென்பது அறியப்பெறுகிறது. இரவி மாதங்களைச் சைத்திரம் முதலியனவாகத் திரித்துப் பெயர்க் காரணமாக்க ஆரியர் முயன்றன ரென்பதற்கு வேறு காரணங்களும் உள. இவ்வாரியர்கள் நிறைமதி சேரும் நாளைக் கொண்டு தமிழ் மக்கள் மாதங்களுக்குப் பெயரமைத்திருப்பரோ என மயங்கி உண்மைக் காரணத்தை விட்டு விட்டு அதையெழுதத் தொடங்கியபோது சில இரவி மாதங்களில் இரண்டு நிறைமதிகள் வந்தன. அப்போது அவர்கள் ''ஒரே மாதத்தில் இரண்டு நிறைமதிகள் உள்ளனவே; என் செய்வது'' என்று காரணம் ஒன்றும் கூறத்தோற்றாது மலைத்தனர். அவ்வாறு மலைக்கச் செய்தபடியால் அவ்விதமாக இரண்டு நிறைமதி வரும் மாதங்களை மலை மாதமெனப் பெயரிட்டழைத்தனர். மிகச் சிலவான காலங்களிலேயே நிறைமதி ஒன்றுமில்லாததாகச் சில இரவி மாதங்களிருந்தன. அவைகளை நச்சுமாத (விஷமாத) மென்று பெயரிட்டழைத்தனர். இவைகளும்

நிறைமதி சேரும் விண்மீனை வைத்துப் பெயர்க்காரணமமைக்கப் புகுந்த அவர்களை மலைக்கச் செய்தபடியால் இவைகளையும் அவர்கள் மலைமாத மெனவே வழங்குவாராயினர். இவர்கள் இவ்வாறெல்லாம் செய்த முயற்சி இரவி மாதங்களை யன்றி ஏனைத் திங்கட் கணக்கு மாதங்களுக்குக் குறைமதி யில்லாதனவோ அன்றி இரண்டு நிறைமதி வருவனவோ அம்மாதங்களில் இல்லை யாதலின், ஒரு காலத்திலும் பொருந்தா. இதனால் இக்காலத்து வழங்கும் திங்கட் கணக்கு ஏற்பாடு பிற்காலத்தில் அமைக்கப் பெற்றதென்பது ஊகித்தறிய இருக்கிறது. நிற்க.

இனிக் கிறித்தவச் சமயத்தினர் எவ்வாறு மாதத்தைக் கணிக்கிறார்கள் என ஆராய்வோம். ஏசுகிறிஸ்து நாதர் பிறப்பதற்கு முன்னாலேயே அவர்கள் இரவியினுடைய போக்கைக் கொண்டே ஆண்டினைக் குறித்து வந்தனர். அதன்படி அவர்கள் ஓர் ஆண்டுக்கு முந்நூற்றறுபத்தைந்து நாளென்று கணக்கு வைத்து வந்தார்கள். அவர்களும் ஓர் ஆண்டினைப் பன்னிரண்டு மாதங்களாகவே பிரித்தனர். அம்மாதங்களின் பெயர்களும் அவைகளின் நாட்களும் பின் வருவன.

| *மாதம்* | *நாள்* |
|---|---|
| (௧) ஜனவரி | ௩௧ |
| (௨) பிப்ரவரி | ௨௮ |
| (௩) மார்ச்சு | ௩௧ |
| (௪) ஏப்பிரல் | ௩௰ |
| (௫) மே | ௩௧ |
| (௬) ஜூன் | ௩௰ |
| (௭) ஜூலை | ௩௧ |
| (௮) ஆகஸ்ட் | ௩௧ |
| (௯) செப்டம்பர் | ௩௰ |
| (௰) அக்டோபர் | ௩௧ |
| (௰௧) நவம்பர் | ௩௰ |
| (௰௨) டிசம்பர் | ௩௧ |
| | **௩௬௫** |

மேலே குறித்துள்ளபடி அவ்வம்மாதத்துக்குரிய நாட்கள் எக்காலத்திலும் ஒன்று போல்வருவன. ஆனால் இம்முந்நூற்றைம்பத்தைந்து நாட்களுடன் ஒரு நாளில் ஏதோ ஒரு சிறு அளவு கூட்ட வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும்.

இதனால் பல்லாயிர நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் வானூற் புலமையிலும் மிகவும் சிறந்த ஆராய்ச்சியுடன் விளங்கினரென்பதும் மேல்நாட்டினர் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தெரிந்துகொண்டதாகிய ''பூமியே இரவியைச் சுற்றுகிறது, ஞாயிறு பூமியைச் சுற்றவில்லை'' என்ற உண்மையைத் தமிழ்மக்கள் அப்பல்லாயிர நூற்றாண்டுகளுக்கு முன்னரே தெரிந்திருந்தனரென்பதும் தமிழ்மக்கள் நுண்ணறிவிலும் ஆராய்ச்சியிலும் ஈடுமெடுப்பு மற்றிருந்தன ரென்பதும் தெளிவாகத் தெரிகிறது. தமிழ்மக்களுக்கு அடுத்தபடியாக ஆராய்ச்சியிற் சிறந்து விளங்கியவர்கள் ஈஜிப்ட் (Egypt) நாட்டினரே. கிரேக்க நாட்டு வீரராகிய மிக மேன்மைபெற்ற மன்னர் அலெக்சாண்டர் என்பவர் பெயரால் இந்த ஈஜிப்ட் நாட்டில் அலெக்சாண்டிரியா என்று ஓர் நகர் விளங்குகிறது. அந்நகரில் சூசிஜினஸ் என ஓர் ஒளி நூற்புலவர் திகழ்ந்தார். அவர் கி.மு. 46ஆவது ஆண்டில் ஒரு திட்டம் ஏற்படுத்தினார். அதாவது ஆண்டொன்றுக்குக் கால் நாளாகக் கூட்டி நான்காண்டுக் கொருமுறை ஒருநாள் அதிகப்படுத்த வேண்டுமென்பது. இதனால் நான்காண்டுக் கொருமுறை பிப்ரவரி மாதம் இருபத்தொன்பது நாளாயிற்று. இத்திட்டத்தை முன்னின்று செய்த அரசர் ஜூலியஸ் சீசர். முன் உரோமானியர் இப் பிப்பிரவரி மாதமொன்றே குறைந்த நாளுடனிருத்தலினால் அவ்வொருநாளும் நான்காண்டுக் கொருமுறை இத்துடன் சேர்க்கப்பெற்றது. இவ்வாறு அதிகப்படுத்துவதால் அவர்களுடைய இரவிக்கணக்கு முறைப்படி நூற்றிருபத்தெட்டு ஆண்டுகளில் ஒரு நாள் அதிகமாகிறது; அதாவது நானூறு ஆண்டுகளில் மூன்று நாளும் ஒரு நாழிகையின் ஒரு சிறு பகுதியும் அதிகமாயிற்று.

ஈஜிப்டியரின் பின்னர் ஆராய்ச்சியில் மேன்மை பெற்றவருள் ஒரு வகுப்பினர் உரோமானியர். இவர்களுடைய தலைநகர் உரோம் என்பது. அந்நகரம் கிறித்தவச் சமயத்தலைவர்களாகிய போப்புகளுக்கு இருப்பிடம். இப்போப்புகளில் பதின்மூன்றாவதாகப் பட்டத்துக்கு வந்தவர் போப் கிரகரி (Pope Gregary XIII, 1572-1585.) யென்பவர். இப்பெரியார் மேலே கண்டபடி நானூறு ஆண்டுகளில் ஏற்படும் மூன்றுநாள் சில்லறை நாழிகை வேறுபாட்டைச் சீர்படுத்த எண்ணி, நான்கு நூற்றாண்டுகளில் முதன் மூன்று நூற்றாண்டுகளிலும் ஒவ்வொரு நூற்றாண்டின் ஈற்றிலும் வருகிற லீப் ஆண்டை (Leap year) லீப் ஆண்டாகக் கணக்கிடாமல் எப்போதும் போற் கணக்கிட்டு அவ்வாண்டுகளின் பிப்ரவரி மாதங்கள் இருபத்தெட்டு நாட்களாக எண்ணவேண்டுமென்றும், நான்காவது நூற்றாண்டின் முடிவில் வருகிற லீப் ஆண்டை மாத்திரம் லீப் ஆண்டாகவே வைத்து அவ்வாண்டின் பிப்ரவரி மாதத்துக்கு இருபத்தொன்பது நாளாகக் கொள்ள வேண்டுமெனவும் விதிசெய்தார். லீப் ஆண்டாவது நான்கு ஆண்டுகளுக் கொருமுறை பிப்பிரவரி மாத நாளை இருபத்தொன்பதாகக் கொள்ள ஏற்பட்ட ஆண்டு. இதை எளிதில் அறிவதற்காகக் கிறித்தவ ஆண்டை நான்கால் வகுத்தால் மீதமில்லாமலிருக்கும் ஆண்டு எதுவோ அதுவே லீப் ஆண்டென்று விதித்திருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக நிகழும் கி.பி. 1928ஐப் பார்க்குமிடத்து, இதை நான்கால் வகுத்தால் மீதமில்லை. ஆதலினாலே இது லீப் ஆண்டெனப்படும். இவ்வாண்டிலுள்ள பிப்ரவரி மாதம், ஒளி நூற்புலவர் சூசிஜீனஸ் விதிப்படி, இருபத்தொன்பது நாட்களையுடையதாம்.

மேலே கண்ட கணக்கினால் ஈடான மூன்று நாள் போக மீதமிருக்கும் சில்லறை நாழிகை நாலாயிர மாண்டுகளுக் கொருமுறை ஒரு நாளாகும். அப்போது அதனைக் கழித்து ஈடுசெய்துகொள்ள வேண்டும். இவ்வேற்பாடு செய்கிறவரை உண்மையில் பத்து நாட்கள் குறைந்திருந்தன. இந்த வேறுபாட்டைச் சீர்ப்படுத்த எண்ணிய போப் கிரகரி என்பார் கி.பி. 1582இல் அக்டோபர் மாதம் நான்காந்

தேதியின் பிற்பாடு பதினைந்தாம் தேதி என வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதி செய்தனர். அச்சமயத் தலைவர் செய்த விதியைக் கிறித்தவரனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

அக்காலத்திலும் கூட அறிவுவளர்ச்சி மிக்கில்லாத இங்கிலாந்து நாடு இவ்வேற்பாட்டை நடைமுறையிற் கொண்டுவர சில நூற்றாண்டுகள் தாழ்த்தது. இவ்வேற்பாடு கி.பி. 1752இல்தான் இங்கிலாந்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப் பெற்றது. அப்போது பதினொரு நாள் வேறுபாடிருந்தது. அதனால் ஆங்கிலேயர்கள் கி.பி. 1752 செப்டம்பர் மாதம் இரண்டாந் தேதிக்குப் பிற்பாடு பதினான்காம் தேதியென்று கணக்கிட்டார்கள். இப்படி ஏற்பாடு இன்னும் 'ரஷ்யா' நாட்டில் நடைமுறைக்கு வந்திலது. அங்கே பழைய முறையே கையாளப்பெற்று வருகிறது. அதன்படி இங்கிலாந்துக்கும் அந்நாட்டுக்கும் பன்னிரண்டு நாள் வேறுபாடு இப்போது இருக்கிறது.

கிறித்தவர்கள் பழைய காலத்தில் மார்ச்சு மாதத்தை முதல் மாதமாகக் கொண்டிருந்தனர். ஜூலியஸ்சீசர் என்ற உரோமானிய மன்னராலேயே சனவரி மாதம் முதன் மாதமாக மாற்றப்பெற்றது. இதுகாறும் தமிழ் மக்களின் வரலாறு, முகம்மதியருடைய மாதங்களின் வரலாறு, கிறித்தவர்களது மாதங்கள் வரலாறுகள் தெளிவாக ஆராயப்பெற்றன.

**தமிழ்ப்பொழில்**, துணர் 4, மலர் 1-2. (விபவ-சித்திரை, வைகாசி)

## தமிழ்ச் செய்திமடல்கள்




**செய்திமடல் - 1**




**செய்திமடல் - 2**




**செய்திமடல் - 3**




**செய்திமடல் - 4**




**செய்திமடல் - 5**

# பணியரங்குகள்

**பணியரங்கம் 1**

## இறையனார் களவியல் செம்பதிப்புப் பணியரங்குகளின் தொகுப்பறிக்கை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செம்பதிப்புத் திட்டத்தின்கீழ் இறையனார் களவியல் செம்பதிப்புப் பணி நடைபெறுகிறது. இதன் ஒரு கூறாக இறையனார் களவியலின் பாட வேறுபாடுகளைச் சுவடிகள்வழி ஆய்ந்து சரிசெய்வதற்கென மூன்று பகுதிகளாகப் பணியரங்குகள் நடத்தப்பட்டன. முதல் பகுதி 16.07.2010 முதல் 31.07.2010 முடிய பதினாறு நாள்களும் இரண்டாம் பகுதி 02.08.2010 முதல் 11.08.2010 முடிய பத்து நாள்களும் மூன்றாம் பகுதி 14.09.2010 முதல் 27.09.2010 முடிய பதினான்கு நாள்களும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றன.

இப்பணியரங்குகளில் கலந்துகொண்டோர் விவரம் வருமாறு:

**பேராசிரியர் அ. தாமோதரன்**
**பேராசிரியர் க. இராமசாமி**
**முனைவர் கா.கோ. வேங்கடராமன்**
**முனைவர் கி. ஜெயக்குமார்**
**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
**திரு பா. இராஜா**
**திரு மொ. மருதமுத்து**
**திரு க. பத்மநாபன்**
**திரு கோ. உத்திராடம்**
**திரு அ. முருக சுவாமிநாதன்**
**திரு தி.ஞா. அருள் ஒளி**

இப்பணியரங்குகளில் 18 சுவடிகள் சரிபார்க்கப்பட்டன. இவற்றில் உரிய பாடவேறுபாடுகள் நுட்பமாக ஆய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டன.

★

**பணியரங்கம் 2**

## இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்விப் பணியரங்குகளின் தொகுப்பறிக்கை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதன்மைத் திட்டங்களுள் ஒன்றான இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டத்தின்கீழ் 2010 சூலை -திசம்பர் காலப்பகுதியில் மூன்று பணியரங்குகள் நடைபெற்றன. இவற்றில் பேராசிரியர் சு. இராசாராம் வல்லுநராகக் கலந்துகொண்டார். இப்பணிக் குழாமில் முனைவர் அன்னிதாமசு, முனைவர் ந. தேவி, முனைவர் ப. கண்ணதாசன், திரு சு. கார்த்திகேயன், திருமதி செய்யது அலி பாத்திமா ஆகியோர் பங்கேற்றனர்.

அ) 04.08.2010 முதல் 18.08.2010 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற பதினைந்து நாள் பணியரங்கில் கருத்தலகு ஒன்று (அகம்) மற்றும் கருத்தலகு ஐந்து (இலக்கணம்) ஆகியவற்றுக்கான இணையப் பக்கங்கள் வடிவமைக்கும் பணி மேற்கொள்ளப்பெற்றது.

ஆ) 01.10.2010 முதல் 16.10.2010 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற பதினைந்து நாள் பணியரங்கில், அதுவரை நிறைவு செய்யப்பெற்ற இணையப் பாடத்திற்குரிய ஒலி ஒளி இணைப்புகள் சேர்க்கப்பட்டன. தேசியத் தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 11.10.2010, 12.10.2010 ஆகிய இரு நாள்களில் இணைய வகுப்பிற்கான 24 பாடங்களின் விரிவுரை ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இதில் ஆறு பேராசிரியர்கள் வல்லுநராகப் பங்குபெற்றனர்.

இ) 26.10.2010 முதல் 01.11.2010 வரை தேசியத் தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற ஏழு நாள் பணியரங்கில் இணைய வகுப்பிற்காக ஒளிப்பதிவு செய்யப்பெற்ற அகம் மற்றும் இலக்கணப் பாடங்களுக்கான விரிவுரைகளைத் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பெற்றது.

★

**பணியரங்கம் 3**

## தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புக்கள் - நூலாக்கப் பணியரங்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதன்மைத் திட்டங்களுள் ஒன்றான தமிழின் தொன்மை - பன்முக ஆய்வுத் திட்டத்தின் சார்பில் 2006 சூலை 27, 28 ஆகிய நாள்களில் 'தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புக்கள்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டது. அக்கருத்தரங்கில் அறிஞர்களால் வாசிக்கப்பட்ட பதினேழு கட்டுரைகளை மதிப்பிடும் பணி 06.07.2010, 07.07.2010 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இம் மதிப்பீட்டுக் கூட்டத்தில் கீழ்க்காணும் அறிஞர்கள் கலந்துகொண்டார்கள்

**பேராசிரியர் எஸ்.ஏ.கே. துர்கா**
(மதிப்பீட்டாளர்)

**பேராசிரியர் எம். வைத்தியலிங்கம்**
(மதிப்பீட்டாளர்)

**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்**
(ஒருங்கிணைப்பாளர்)

**முனைவர் கூ.மு. புவனேசுவரி**
(இணை ஒருங்கிணைப்பாளர்)

இக் கூட்டத்தில் ஏழு கட்டுரைகள் நூலாக்கம் செய்வதற்காக மதிப்பீட்டாளர்களால் தெரிவு செய்யப்பட்டன.

★

# கூட்டங்கள்

கூட்டம் 1

## கருத்தரங்குகள், பயிலரங்குகளைத் தேர்வு செய்யும் குழுக் கூட்டம்



கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கருத்தரங்க, பயிலரங்கத் திட்டப் பணிகளைத் தெரிவு செய்யும் வல்லுநர் குழுக் கூட்டம் 12.08.2010 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பின்வரும் உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் ச.மோகன்**
*(இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தலைவர்)*

**கவிவேந்தர் கா. வேழவேந்தன்**
*(உறுப்பினர், எண்பேராயம்)*

**முனைவர் பு.பா. இராசராசேசுவரி**
*(உறுப்பினர், ஐம்பெருங்குழு)*

**பேராசிரியர் சி. சண்முகம்**
*(புறவல்லுநர்)*

**பேராசிரியர் கு. சிவமணி**
*(அகவல்லுநர்)*

**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
*(ஒருங்கிணைப்பாளர்)*

**பேராசிரியர் க. இராமசாமி**
*(பொறுப்பு அலுவலர், அமைப்பாளர்)*

இக்கூட்டத்தில் 26 நிறுவனங்களுக்குக் கருத்தரங்க நிகழ்ச்சி நடத்தவும் 25 நிறுவனங்களுக்குப் பயிலரங்க நிகழ்ச்சி நடத்தவும் நிதியுதவி வழங்க முடிவுசெய்யப்பட்டது. மேலும் கருத்தரங்கம் ஒன்றிற்கு அதிகபட்சமாக 1,50,000/- உரூபாயும் பயிலரங்கம் ஒன்றிற்கு அதிகபட்சமாக 2,50,000 உரூபாயும் நிதியுதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

★

கூட்டம் 2

## செம்மொழித் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புக் கலந்தாய்வுக் கூட்டம்

திருவாரூரில் உள்ள தமிழ்நாட்டு நடுவண் பல்கலைக் கழகத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் கூட்டு முயற்சியோடு செம்மொழித் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பை உருவாக்குவதற்கான கலந்தாய்வுக் கூட்டம் 13.08.2010 அன்று காலை 11 மணியளவில் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலக மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர் க. இராமசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தமிழ்நாட்டு நடுவண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பி.பி. சஞ்சய் இக்கூட்டத்திற்கான நோக்கத்தைப்பற்றி எடுத்துரைத்தார். இந்தக் கூட்டத்தில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

**திரு வி.கே. ஸ்ரீதர்**
**பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி**
**பேராசிரியர் அ.அ. மணவாளன்**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**முனைவர் அன்னிதாமசு**
**பேராசிரியர் கு. சிவமணி**
**முனைவர் மே.து. இராசுகுமார்**

முப்பருவங்கள் கொண்ட செம்மொழித் தமிழ் முதுநிலைப் பட்டயப் படிப்பை உருவாக்குவதற்கான முதற்கட்ட முன்மொழிவு உருவாக்கப்பட்டிருந்தாலும் நீண்ட விவாதத்திற்குப் பின் நான்கு பருவங்களைக் கொண்ட முதுகலைச் செம்மொழித் தமிழ்ப் பட்டப் படிப்பை உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பின்வரும் இரண்டு முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

1. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்நாட்டு நடுவண் பல்கலைக்கழகமும் இணைந்து முதுகலைச் செம்மொழித் தமிழ்ப் பட்டப் படிப்புத் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை விரைவில் உருவாக்க வேண்டும்.

2. செம்மொழித் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புக்கான பாடத்திட்டக் குழு ஒன்றை உருவாக்க வேண்டும்.

★

கூட்டம் 3

## மின்னூலகத் திட்டக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மின்னூலகத் திட்டக் குழுக் கூட்டம் 13.08.2010 அன்று நடைபெற்றது.



இந்தக் கூட்டத்தில் பேராசிரியர் ச. மோகன், பேராசிரியர் க. இராமசாமி, பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன், முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி, பேராசிரியர் இரா. கோதண்டராமன், முனைவர் மே.து. இராசுகுமார், பேராசிரியர் கு. சிவமணி, முனைவர் அன்னிதாமசு ஆகியோர் கலந்துகொண்டனர்

★

கூட்டம் 4

## செம்மொழித் தமிழ்க் காட்சிக் குறும்படத் திட்ட அறிவுரைக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழ்க் காட்சிக் குறும்படங்களை உருவாக்குவதற்கான திட்ட அறிவுரைக் குழுக் கூட்டம் 16.08.2010 அன்று காலை 11 மணியளவில் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வந்திருந்த அறிஞர்களைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி வரவேற்றுப் பேசினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் தலைமைதாங்கினார். இந்தக் கூட்டத்தில் பின்வரும் அறிஞர்கள் பங்குபெற்றனர்.

**திரு ஏ. ஜெகந்நாதன்** - உறுப்பினர்

**திரு எஸ்.பி. முத்துராமன்** - உறுப்பினர்

**திரு து. இரவிக்குமார் ச.ம.உ** - உறுப்பினர்

**திரு இ. மாரியப்பன்** - உறுப்பினர்

**திரு ஜெகத் கஸ்பர் ராஜ்** - உறுப்பினர்

**திரு இரமேஷ் பிரபா** - உறுப்பினர்

**பேராசிரியர் ஏ. அமல்ராஜ்** - உறுப்பினர்

**திரு வி.எம். இரவிராஜ்** - உறுப்பினர்

**முனைவர் இரெ. குமரன்** - ஒருங்கிணைப்பாளர்

விரிவான விவாதத்திற்குப் பின்னர்ப் பின்வரும் முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

1.இந்தத் திட்டத்தின்படி முதல் கட்டமாகக் கி.பி ஆறாம் நூற்றாண்டுக்கு உட்பட்ட மொழி, இலக்கியம், தொல்லியல், இசை, சிற்பம் ஆகியவை தொடர்பான காட்சிக் குறும்படங்களை உருவாக்குதல்.

2.இயற்கைக் காட்சிகளைப் படமாக்குவதில் உள்ள சுணக்கத்தைப் போக்க டிஸ்கவரி, நேஷனல் ஜியாகிராஃபிக் சேனல், பிபிசி ஆகியவற்றோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுக்கொள்ளலாம்.




3.சிறந்த தயாரிப்பாளர்களிடமிருந்து செவ்வியல் காலம் தொடர்பான ஆவணப்படங்கள் காட்சிக் குறும்படங்களாக இருப்பின் அதை விலைக்கு வாங்கலாம்.

4.செவ்வியல் கலையோடு தொடர்புடைய இசைநாடகங்களைத் தயாரித்தல்.

5. சிறப்புக் குழு ஒன்று பேராசிரியர் க. இராமசாமியின் நெறிகாட்டலின்கீழ் முனைவர் இரெ. குமரனை ஓர் உறுப்பினராகக் கொண்டு குறும்பட உரையாடலை மதிப்பிடல் வேண்டும்.

6.குறும்பட உரையாடல் கடந்த காலத்தைப் பிரதிபலிப்பதோடு பொதுமக்களுக்குப் புரியும் வகையில் அமைய வேண்டும்.

முனைவர் இரெ. குமரனின் நன்றியுரையோடு இக்கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

★

கூட்டம் 5

## இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்ட அறிவுரைக் குழுக் கூட்டம்



இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்ட அறிவுரைக் குழுக்கூட்டம் 18.08.2010ஆம் நாள் நடைபெற்றது. இதில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் ச. மோகன்** (இயக்குநர், தலைவர்)

**பேராசிரியர் பு.பா. இராசராசேசுவரி**
(உறுப்பினர், ஐம்பெருங்குழு)

**பேராசிரியர் சு. இராசாராம்**

**பேராசிரியர் ப.ரா. நக்கீரன்**

**பேராசிரியர் வி.பி. தேவதத்தா**

**பேராசிரியர் ச. சிவகாமி**

**பேராசிரியர் ச. பாலசுப்பிரமணியன்**

**முனைவர் அன்னிதாமசு**
(ஆய்வறிஞர், ஒருங்கிணைப்பாளர்)

**பேராசிரியர் க. இராமசாமி**
(பொறுப்பு அலுவலர், நடத்துநர்)

இணையத்தில் செம்மொழித் தமிழ்க் கல்விக்கான பாடத்திட்டத்தை ஏற்றம் செய்வதற்கு இக்கூட்டத்தில் தொழில்நுட்ப அறிவுரைகள் உறுப்பினர்களால் வழங்கப்பெற்றன. பாடத்திட்டத்திற்கான அகராதி, கலைச்சொல் அகராதி ஆகியன உருவாக்கப்படும் என

இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஒலிப்பதிவு மற்றும் ஒளிக்காட்சிகள் பாடத்திட்டத்திற்கேற்றவாறு உருவாக்கப்பட வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

★

*கூட்டம் 6*

## முனைவர் பட்ட ஆய்வு உதவித்தொகை நேர்காணலும் தேர்வுக் குழுக் கூட்டமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் எழுத்துத் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு முனைவர் பட்ட ஆய்வு உதவித் தொகை வழங்குவதற்கான நேர்காணலும் தேர்வுக் குழுக் கூட்டமும் 30.09.2010ஆம் நாள் நடந்தன. இக்குழுவில் இடம்பெற்றோர்:

**பேராசிரியர் ச. மோகன்**
இயக்குநர், தலைவர்

**கவிஞர் ஈரோடு தமிழன்பன்**
புறவல்லுநர்

**திரு து. இரவிக்குமார்**
உறுப்பினர், எண்பேராயம்

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
அக வல்லுநர்

**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்**
ஒருங்கிணைப்பாளர்

**பேராசிரியர் க. இராமசாமி**
உறுப்பினர், அமைப்பாளர்

எழுத்துத் தேர்வில் தேர்ச்சிபெற்ற 30 மாணவர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டனர்.

★

*கூட்டம் 7*

## முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகை நேர்காணலும் தேர்வுக் குழுக் கூட்டமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் எழுத்துத் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு முனைவர் பட்ட மேலாய்வு உதவித் தொகை வழங்குவதற்கான நேர்காணலும் தேர்வுக் குழுக் கூட்டமும் 30.09.2010ஆம் நாள் நடந்தன. இக்குழுவில் இடம்பெற்றோர்:

**பேராசிரியர் ச. மோகன்**
இயக்குநர், தலைவர்

**கவிஞர் ஈரோடு தமிழன்பன்**
புறவல்லுநர்

**திரு து. இரவிக்குமார்**
உறுப்பினர், எண்பேராயம்

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
அக வல்லுநர்

**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்**
ஒருங்கிணைப்பாளர்

**பேராசிரியர் க. இராமசாமி**
உறுப்பினர், அமைப்பாளர்

எழுத்துத் தேர்வில் தேர்ச்சிபெற்ற 4 மாணவர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டனர்.

★

*கூட்டம் 8*

## ஆய்வுத் திட்டங்களுக்கு நிதிநல்கை முதற்கட்டத் தெரிவுக் குழுக் கூட்டங்கள்

பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த ஆய்வறிஞர்களிடமிருந்து பெறப்பட்ட ஆய்வுத் திட்ட விண்ணப்பங்களிலிருந்து 2010-11ஆம் ஆண்டிற்கான ஆய்வுத் திட்ட நிதிநல்கைக்கான முதற்கட்டத் தெரிவு செய்யும் வல்லுநர் கூட்டம் 21.07.2010 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் பேராசிரியர் க. இராமசாமி தலைமையில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் அன்னிதாமசு, பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, பேராசிரியர் ப. மருதநாயகம், பேராசிரியர் கு. சிவமணி ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு 85 விண்ணப்பங்களிலிருந்து 43 ஆய்வுத் திட்டங்களை நேர்காணலுக்குத் தெரிவுசெய்தது.

இதே ஆண்டில் மீண்டும் 08.11.2010இல் முதற்கட்டத் தெரிவுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் 24 விண்ணப்பங்களிலிருந்து 12 ஆய்வுத் திட்டங்கள் நேர்காணலுக்குத் தேர்வு செய்யப்பெற்றன.

★

*கூட்டம் 9*

## ஆய்வுத் திட்ட நிதிநல்கை வல்லுநர் குழுக் கூட்டங்கள்

1). முதற்கட்டத் தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுத் திட்டங்களைத் தேர்ந்து எடுக்கும் 2010-11 ஆம் ஆண்டுக்கான ஆய்வுத் திட்ட நிதிநல்கைக்கான வல்லுநர் குழுக் கூட்டம் 19.08.2010, 20.08.2010, 21.09.2010 ஆகிய மூன்று நாள்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்வரும் வல்லுநர்கள் கலந்துகொண்டனர்.

**பேராசிரியர் ச. மோகன்**
இயக்குநர், தலைவர்

**பேராசிரியர் ம. நன்னன்**
உறுப்பினர், எண்பேராயம்

**பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியம்**
உறுப்பினர், தமிழ்மொழி மேம்பாட்டு வாரியம்

**பேராசிரியர் வ. ஜெயதேவன்**
புறவல்லுநர்

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
முதுநிலை வல்லுநர்

**முனைவர் அன்னிதாமசு**
ஒருங்கிணைப்பாளர்

**பேராசிரியர் க. இராமசாமி**
நடத்துநர்

முதன்முதலாக இந்த ஆண்டு முதற்கட்டத் தெரிவுக் குழுவால் தெரிவு செய்யப்பெற்ற அறிஞர்கள் கலந்துகொண்டு தம் கருத்துக்களை மொழிய வாய்ப்பளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பின்வரும் 32 ஆய்வுத் திட்டங்கள் நிதிநல்கைக்காகத் தெரிவு செய்யப்பெற்றன.

திருமிகு பி. உஷாதேவி - **செவ்விலக்கியப் பாடல்கள்-அசைகலைப்படம்**

திரு பூரணச் சந்திர ஜீவா - **சங்ககாலத் தமிழியும் சிந்து எழுத்தும்**

திரு சிவப்பிரகாசம் பத்மநாபன் - **பழந்தமிழ்ப் பண்பாட்டில் உலோகங்கள்**

முனைவர் பா. இறையரசன் - **சங்க கால மக்கட் பெயர்கள்**

திரு கி. அ. சச்சிதானந்தம் - **திருக்குறளும் திருவிவிலியமும் ஓர் உயர்நிலை ஒப்பாய்வு**

முனைவர் கே. ஏ. வெங்கடாச்சாரி - **இந்திய வழிபாட்டுச் சடங்குகளுக்குத் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் பங்களிப்பு**

முனைவர் தி. மகாலட்சுமி - **சிலப்பதிகாரக் களஞ்சியம்**

முனைவர் கு. அரசேந்திரன் - **தமிழுக்கும் வட இந்திய மொழிகட்கும் இடையேயான வேர்ச்சொல் ஒப்புமைகள் - இலக்கண ஒப்புமைகள் பகுதி - II**

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் - **சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - மதிப்பாய்வு**

முனைவர் ச. சிவசுப்பிரமணியன் - **செவ்வியல் நூல்களில் பறவைகள் - ஆவணப்படம்**

முனைவர் இரா. காசிராசன் - **சிலப்பதிகார ஆய்வடங்கல்**

முனைவர் பெ. சுபாசு சந்திர போசு - **சங்க இலக்கியத்தில் கடல் வணிகமும் பண்பாட்டுப் பரிமாற்றங்களும்**

முனைவர் சி. இலட்சுமணன் - **செவ்வியல் நூல்களின் (41) தாள்சுவடிகள்**

முனைவர் சண்முக. செல்வ கணபதி - **சிலப்பதிகாரம் வழி அறியலாகும் ஆடல் அரங்கேற்ற நுட்பங்கள்**

திரு க. இரத்னம் - **செம்மொழி இலக்கியங்களில் பறவைகள்**

முனைவர் வெ.மு. ஷாஜகான் கனி- **திணை வரலாற்றில் நாடக வரலாறு**

திரு பி.டி.ஆர். கமலை தியாகராஜன் - **தமிழ், ஐரோப்பிய இசைக்கருவிகள் இசைக்கும் முறைகள் - ஓர் ஒப்பாய்வு**

முனைவர் இந்திரா மனுவேல் - **கலித்தொகை மரபும் மாற்றமும்: ஒரு நுண்ணாய்வு**

முனைவர் குடவாயில் எம். பாலசுப்பிரமணியன் - **செம்மொழி இலக்கியங்களில் பல்கலை நோக்கில் ஆய்வு**

முனைவர் எஸ். சந்திரா - **சங்கத் தமிழ்த் தொன்மங்களும் கிரேக்கத் தொன்மங்களும்**

பேராசிரியர் அ. காமாட்சிநாதன் - **சங்கத் தமிழ்ச் சொற்களஞ்சியம்**

பேராசிரியர் கா. இராசன் - **பொருந்தல் அகழாய்வு: அறிக்கை தயாரித்தல்**

முனைவர் ச. கார்லோஸ் - **வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம்**

முனைவர் டபிள்யு. லிண்டா கிறிஸ்டி - **துளு, கொடவ மற்றும் கொங்கணி மக்களின் பண்பாட்டுப் பின்னணியில் சங்க இலக்கியம் - ஓர் ஆய்வுத் திட்டம்**

பேராசிரியர் உள்ளூர் மு. பரமேஸ்வரன் - **ஐங்குறுநூறு மலையாள மொழிபெயர்ப்பு**

முனைவர் தி. தாமரைச்செல்வி - **இலக்கிய இதழ்கள் வழித் திருக்குறள் ஆராய்ச்சி (1800 முதல் 1950 வரை)**

முனைவர் க. இளமதி சானகிராமன் - **பண்டைய இலக்கண இலக்கியங்களில் மெய்ப்பாடுகள்**

முனைவர் பி. சிவக்குமார் - **செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன வலைத்தளத்திற்கான தரவுகளைப் பல்லூடகத் தொழில்நுட்பவழி வளப்படுத்துதல்**

முனைவர் கோ. குழந்தைவேல் - **செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன வலைத்தள வாயில் மேம்பாடு**

முனைவர் எஸ். ஸ்ரீகுமார் - **தொல்காப்பியம் - தொல்காப்பியர் - குமரி மாவட்டம் - நிலவியல் - சமூக - பண்பாட்டு மானுடவியல் தொடர்புகளும் எச்சங்களும் - களப்பணி ஆய்வு**

முனைவர் அ.கா. பெருமாள், திரு செந்தீ நடராசன் - **பழந்தமிழர் பண்பாட்டு நினைவுச் சின்னங்கள்**

பேராசிரியர் அ.அ. மணவாளன் - **திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புத் தொகுப்பு - காமத்துப்பால்**

**2).** 2010-11ஆம் ஆண்டுக்குரிய ஆய்வுத்திட்ட நிதிநல்கைக்கான இரண்டாவது வல்லுநர் குழுக் கூட்டம் 17.11.2010 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தின் வல்லுநர் குழு பின்வருமாறு:

**பேராசிரியர் ச. மோகன்** - இயக்குநர், தலைவர்

**பேராசிரியர் ம. நன்னன்** - உறுப்பினர், எண்பேராயம்

**பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியன்** - உறுப்பினர், தமிழ்மொழி மேம்பாட்டு வாரியம்

**பேராசிரியர் வ. ஜெயதேவன்** - புறவல்லுநர்

**பேராசிரியர் அன்னிதாமசு** - ஒருங்கிணைப்பாளர்

**பேராசிரியர் க. இராமசாமி** - நடத்துநர்

இக்கூட்டத்தில் நேரில் அழைக்கப்பெற்ற அறிஞர்களிலிருந்து பின்வரும் 12 அறிஞர்களின் ஆய்வுத் திட்டங்கள் நிதிநல்கைக்குத் தெரிவு செய்யப்பெற்றன.

பேராசிரியர் ஏ. மரியசூசை - **நன்னன்சேய் நன்னன் நாட்டின் வரலாற்றுத் தடயங்கள்**

முனைவர் எம். சற்குணவதி - **மணிமேகலைக் களஞ்சியம்**

முனைவர் க. நெடுஞ்செழியன் - **பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்களின் மெய்யியல் கோட்பாடுகள்**

முனைவர் மேரி பியர் அகஸ்டின் - **நாலடியார் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு**

முனைவர் எஸ். அழகேசன் - **சங்க இலக்கிய உரையாசிரியர்கள் உணர்த்தும் இலக்கணக் குறிப்புக்கள் - தொல்காப்பிய ஆய்வு**

பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியம் - **தொல்வரலாற்றுக்காலம் (சங்ககாலம் கி.மு 300 - கி.பி 300) முதல் இடைக்காலத் தொடக்கம் (கி.பி.600-1300) வரையுள்ள தமிழகக் கல்வெட்டுச் சொற்களின் பொருள் தொடரடைவு**

முனைவர் ஆர். சீனிவாசன் - **சங்க இலக்கிய மொழிபெயர்ப்புக்கள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)**

திரு தேவபேரின்பன் - **தமிழர் தத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரை) தத்துவ வரலாற்றியல் பார்வையில்**

திரு எஸ். முகம்மது யூசுப் - **நாலடியார் அறநூலின் மலையாளக் கவிதை மொழியாக்கம்**

திரு அடிகளாசிரியன் - **தொல்காப்பிய ஆய்வு**

திரு எம். பாலசுப்பிரமணியன், திரு நா. மம்மது - **தமிழ்த் திணையியல் களஞ்சியம்**

முனைவர் ந. ஜெயபிரகாஷ் - **கச்சாயணம், பாலி - தமிழ் மொழிபெயர்ப்பும் தொல்காப்பிய ஒப்பீடும்**

★

கூட்டம் 10

## குறுந்திட்டப் பணிகள் மதிப்பீட்டுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தினால் அளிக்கப்பட்ட குறுந்திட்டப் பணிகளில் நிறைவுற்ற, நிறைவிற்குரிய திட்டங்களை மதிப்பீடு செய்யும் கூட்டம் 24.08.2010, 09.09.2010, 18.11.2010, 21.12.2010 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இக்கூட்டங்களில் கலந்துகொண்ட நிறுவன மதிப்பீட்டுக் குழு வல்லுநர்கள் கீழ்வருமாறு:

**பேராசிரியர் ச. மோகன்**
இயக்குநர், தலைவர்

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
முதுநிலை ஆய்வறிஞர், வல்லுநர்

**பேராசிரியர் ப. மருதநாயகம்**
ஆய்வறிஞர், வல்லுநர்

**பேராசிரியர் கா.கோ. வேங்கடராமன்**
ஆய்வறிஞர், வல்லுநர்

**பேராசிரியர் கு. சிவமணி**
ஆய்வறிஞர், வல்லுநர்

**முனைவர் அன்னிதாமசு**
ஆய்வறிஞர், ஒருங்கிணைப்பாளர்

**பேராசிரியர் க. இராமசாமி**
பொறுப்பு அலுவலர், நடத்துநர்

### இம்மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஆய்வாளர்கள்: நிறைவுற்ற திட்டங்கள்

24.08.2010 : பேராசிரியர் இன்குலாப் - **சங்கப் பாடல்களை அரங்க அளிப்பாக வழங்குதல்**

24.08.2010: முனைவர் நா. மார்க்சிய காந்தி - **தமிழின் எழுத்து வகைகள் வளர்ச்சி வழக்காறு நிலைபேறு (கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை)**

24.08.2010 : முனைவர் ஆ. பத்மாவதி - **புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு**

18.11.2010 : முனைவர் பி.கே. கல்யாணி - **ஐங்குறுநூற்றில் பெண்கள்: ஓர் ஆய்வு**

18.11.2010 : பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் - **இந்திய இலக்கணத்தில் தொல்காப்பியத்தின் இடம்**

21.12.2010 : முனைவர் வி. செல்வக்குமார் - **சங்ககாலக் குடியிருப்புகள்: புனல்நாடு/காவிரிநாடு (கீழ்க்காவிரிப் பள்ளத்தாக்கு)**

21.12.2010 : முனைவர் எஸ். சுப்புலட்சுமி - **பறை இசைக்கருவி அன்று முதல் இன்றுவரை**

21.12.2010: முனைவர் அ. தட்சிணாமூர்த்தி - **பத்துப்பாட்டு ஆங்கில மொழிபெயர்ப்புகள்: பதிப்பித்தல்**

### மதிப்பீட்டுக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஆய்வாளர்கள் : நிறைவிற்குரிய திட்டங்கள்

24.08.2010 : திரு அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி - **தமிழ்நாட்டில் சமணம்**

24.08.2010 : முனைவர் எஸ்.ஏ. வீரபாண்டியன் - **செவ்விலக்கிய நூலாகிய திருக்குறளில் இசை**

09.09.2010 : புலவர் இரா. இளங்குமரன் - **செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்**

18.11.2010: முனைவர் என். ஞானப்பழம் - **சங்க இலக்கியப் பாணர் வழக்காறுகள் - தமிழக, கேரளப் பாணர்களின் தற்கால வழக்காறுகளிலிருந்தான ஒப்பாய்வு**

18.11.2010: பேராசிரியர் தேவசங்கீதம் - **சங்க இலக்கியத் தெலுங்கு மொழிபெயர்ப்பு**

18.11.2010 : திரு எம்.வி. பாஸ்கர் - **பழந்தமிழ்க் கல்வெட்டுக்களை மின்னாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்**

மேற்கண்ட எட்டு நிறைவுற்ற ஆய்வுத் திட்டங்களும் ஆறு நிறைவிற்குரிய திட்டங்களும் மதிப்பீடு செய்யப்பெற்று உரிய மாற்றங்களும் அறிவுரைகளும் வல்லுநர் குழுவால் ஆய்வாளர்களுக்கு வழங்கப்பெற்றன.

★

கூட்டம் 11

## குடியரசுத் தலைவர் விருதாளர்களைத் தெரிவுசெய்யும் குழுக் கூட்டம்

2008-09ஆம் ஆண்டுக்கான குடியரசுத் தலைவர் விருதாளர்களைத் தெரிவுசெய்யும் குழுக் கூட்டம் 19.10.2010 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எழுத்தாளர் ஜெயகாந்தன், பேராசிரியர் மா. நன்னன், பேராசிரியர் ச. மோகன், பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி, பேராசிரியர் க. இராமசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.



★

கூட்டம் 12

## முதல் ஆட்சிக் குழுக் கூட்டம்

முதல் ஆட்சிக் குழுக் கூட்டம் 20.10.2010 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் தலைவர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில்

முனைவர் அனிதா பட்நாகர் ஜெயின்
பேராசிரியர் ச. மோகன்
பேராசிரியர் கரு.அழ. குணசேகரன்
பேராசிரியர் கி. நாச்சிமுத்து
பேராசிரியர் இராதா செல்லப்பன்
பேராசிரியர் அ. அ. மணவாளன்
முனைவர் ஐராவதம் மகாதேவன்
முனைவர் கூ.வ. எழிலரசு

ஆகியோர் கலந்துகொண்டனர்.



கூட்டம் 13

## தமிழின் தொன்மை - ஒரு பன்முக ஆய்வு திட்ட அறிவுரைக் குழுக் கூட்டம்

தமிழின் தொன்மை - ஒரு பன்முக ஆய்வு என்னும் திட்டத்தின் கீழ் வருங்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விவாதிப்பதற்காகத் திட்ட அறிவுரைக் குழுக் கூட்டம் 12.11.2010 அன்று காலை 11 மணியளவில் முனைவர் ஐராவதம் மகாதேவன் தலைமையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட வல்லுநர்கள் வருமாறு:

முனைவர் ஐராவதம் மகாதேவன்
முனைவர் வை. கணபதி ஸ்தபதி
மருத்துவர் செ.நெ. தெய்வநாயகம்
முனைவர் ஆர். கிருஷ்ணமூர்த்தி
பேராசிரியர் மா. வயித்தியலிங்கன்
பேராசிரியர் சே. இராமனுஜன்
பேராசிரியர் கு. சந்திரசேகரன்
பேராசிரியர் எஸ்.ஏ.கே. துர்கா
பேராசிரியர் பிரமீளா குருமூர்த்தி
திரு மதுரை ஆர். முரளீதரன்
பேராசிரியர் க. இராமசாமி
பேராசிரியர் அரிமளம் சு. பத்மநாபன்

★

மனிதவள மேம்பாட்டு அமைச்சக இணைச்செயலர் முனைவர் அனிதா பட்நாகர் ஜெயின் அவர்கள் 20.10.2010 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நூலகத்தைப் பார்வையிட்டார்.



## நிறுவன வெளியீடுகள் - விலைப்பட்டியல் - 2010

| வ. எண் | நூல் | ஆண்டு | ஆசிரியர் | எடை கிராம். | விலை ரூ. பை |
|---|---|---|---|---|---|
| 1. | **Dravidian Comparative Grammar –I** | 2008 | P.S.Subrahmanyam | 765 | 350.00 |
| 2. | **சிந்துவெளிப் பண்பாடும் சங்க இலக்கியமும்** | 2010 | ஐராவதம் மகாதேவன் | 170 | 50.00 |
| 3. | **A Dravidian Solution to the Indus Script Problem** | 2010 | Asko parpola | 130 | 50.00 |
| 4. | **செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்** | 2010 | கலைஞர் மு. கருணாநிதி | 175 | 50.00 |
| 5. | **Classical Tamil: Historical Milestones** | 2010 | Kalaignar M. Karunanidhi | 140 | 50.00 |
| 6. | **शास्त्रीय तमिळ: ऐतिहासिक उल्लेखनीय बातें** | 2010 | कलैञर मु. करुणानिदि | 140 | 50.00 |
| 7. | **Ancient Tamil Poetry and Poetics: New Perspectives** | 2010 | P. Marudhanayagam | 625 | 450.00 |
| 8. | **Dynamics of Tamil Finite System** | 2010 | R. Kothandaraman | 950 | 650.00 |
| 9. | **A Compendium of Tirukkuraḷ Translations in English – Vol. I (Aṟattuppāl)** | 2010 | A.A. Manavalan | 1165 | 800.00 |
| 10. | **Muttoḷḷāyiram** (Text, Transliteration and Translations in English Verse and Prose) | 2010 | P. Pandian | 450 | 325.00 |

## இசைக் குறுவட்டுக்கள்




பத்துப்பாட்டு முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ. 250/-




தொல்காப்பியம் முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ. 250/-




பழந்தமிழ்ப் பாக்கள் மரபுவழிப் படித்தலும் பாடுதலும்
(தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)
விலை உரூ. 50/-

# பணிக்குழாம்

இயக்குநர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி
முனைவர் ந. தேவி
முனைவர் க. நர்மதா
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் சு. ஏழுமலை
முனைவர் மு. செல்வதுரை
முனைவர் சே. கரும்பாயிரம்
முனைவர் த. சரவணன்
முனைவர் இரா. வெங்கடேசன்
முனைவர் ந. பெரியசாமி

*முதுநிலை ஆய்வு வளமையர்கள்*

முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் ம. தமிழ்வாணன்
முனைவர் அ. ஆரோக்கியதாசு
முனைவர் மா. சுசிலா
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் சுப. வேல்முருகன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

முனைவர் வே. அழகுமுத்து
முனைவர். ம. நாகராஜன்
திருமதி ம. தாமரைச்செல்வி
திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்
திரு. கி. கண்ணன்
திரு. கோ. சந்திரசேகர்

*ஆராய்ச்சி உதவியாளர்*

முனைவர் சி. இராமச்சந்திரன்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*
திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*
முனைவர். இரா. அகிலன் *(நிரலாளர்)*
திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*
திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*
திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*
திரு. ஜா.வா. பாஸ்கரன்
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*
திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*
திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*
திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*
திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்
திருமதி சு. கீதா
திரு. தி.ஞா. அருள்ஒளி
திரு. மு. முனியசாமி
திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி. ந. ஜெயலட்சுமி
திருமதி. சி. அன்னபூரணி

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண்கீழ்க்கணக்கு**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**முத்தொள்ளாயிரம்**

**இறையனார் களவியல்**